440

# கல்கி



440

KALKI அக்டோபர் 26, 1947 4 அணா

# K. S. E.

நவராத்திரி பண்டிகைக்குப்
புதுமாதிரியான உயர்ந்த ரக
கொள்ளேகாலம் பட்டுச் சேலைகள்

★

கிடைக்குமிடம்:

## காத்தாயி ஸில்க் எம்போரியம்

கீழமாட வீதி, மயிலாப்பூர், மதராஸ்

---

# தி இந்தியன் பாங்க் லிமிடெட்

**தலைமை ஆபீஸ்: "இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்" வடக்கு பீச் ரோடு, மதராஸ்**

**லோகல் ஆபீஸ்கள்: எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மவுண்டு ரோடு மயிலாப்பூர், தியாகராயநகர், புரசவாக்கம், எழும்பூர்**

சென்னை மாகாணத்தில் எல்லா முக்கியமான இடங்களிலும்
பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

★

| | |
|---|---|
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூ. 72,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. 53,00,000 |
| ரிசர்வ் நிதி | ரூ. 60,72,602 |

★

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும். மற்ற விவரங்களுக்குப் பாங்கியின் எந்த ஆபீஸுக்காவது எழுதி தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர், செக்ரடரி

---

## ஏ. ஆர். சகுந்தலா தனது மேனியை லக்ஸ் டாய்லட் சோப்பினால் அழகாகவும், அப்பழுக்கற்றதாகவும் வைத்துக்கொள்கிறார் . . .



எழில்மிக்க, திறமைவாய்ந்த இந் நட்சத்திரம் தனது சருமத்திற்கு தவருமல் அழகு படுத்திக்கொள்ளும் முறை ஒன்றை கையாள்வதன் முக்கியத்தை நன்கு அறிந்திருக்கிறார். அவர் எப்பொழுதும், தனது அழகிய மழமழப்பான மேனிக்கு லக்ஸ் டாய்லட் சோப்பின் இனிய பாதுகாப்பை அளிக்கிறார். தனது மேனியை மாசு மருவற்றதாக வைத்துக்கொள்ள, தனக்குத்தெரிந்த முதல்தரமான வழி இதுவே என்று சொல்கிறார். நீங்களும் ஏன் அதை கையாளக்கூடாது? இந்த சுத்தமான வெண்ணிறம்கொண்ட சோப்பின் மிருதுவான நறுமணங்கமழும் நுரையை நீங்கள் விரும்புவீர்கள்..

*முபாரக் பிக்சர்ஸாரின் "பில்ஹணா" என்ற சரித்திர சம்பந்தமான படத்தில் ஏ. ஆர். சகுந்தலா தோன்றுகிறார். இப்படத்தில் அவரது நடிப்பு மிக உயரிய ரகத்தைச் சேர்ந்ததாகும்.*




## லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களுக்கு அழகுதரும் சோப்

LTS. 164-23-40 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED






கல்கி

198269
சென்னை-600 008

பொருளடக்கம்

மலர் 7 இதழ் 13 | அக்டோபர் 26 | சர்வசித்து௵ ஐப்பசி 10


| | | |
|---|---|---|
| என்ன சேதி? | ... | ... 5 |
| கர்னக யாத்திரை! | சாஸ்திரி | ... 7 |
| நிகழ்ச்சிச் சித்திரம் | சாஸ்திரி | ... 8 |
| கௌரவம் நிலைக்க வழி | ... | ... 9 |
| தமிழ் உயர்ந்தது! | கல்கி | ... 12 |
| எட்டயபுரம் விஜயம் | ... | ... 16-b |
| பாரதி மண்டப விழா (படங்கள்) | ... | ... 16-c |
| வாக்குப் பலித்தது! | செம்பா | ... 27 |
| சந்திர ஹாரம் | பிரேம்சந்த் | ... 39 |
| காலக்ஷேபம் | ... | ... 45 |
| பாரதி கைங்கரியம் (படம்) | ... | ... 47 |
| தர்மமே ஜயம் | தாபன் | ... 48 |


"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

நீலன் சிலை சத்தியாக்கிரஹத்திலிருந்து ஆகஸ்டு புரட்சி இயக்கம் வரையில் ஸ்ரீ சோமயாஜுலு பல தடவைகள் சிறை புகுந்திருக்கிறார்; பல கஷ்ட நஷ்டங்களை அனுபவித்திருக்கிறார்; பல சோதனைகளுக்கும் உள்ளாகியிருக்கிறார்.

அவை எல்லாவற்றிலும் பெரிய சோதனை எட்டயபுரம் பாரதி மண்டபத் திருவிழாவை நடத்திக் கொடுக்க அவர் ஒப்புக் கொண்டபோது ஏற்பட்டது.



சுற்று வட்டாரத்தில் பச்சை மரத்தையே காணமுடியாத எட்டயபுரத்தில் அக்டோபர் மாதத்தில் திருவிழா நடக்க வேண்டும் என்று ஏற்பட்டபோது எத்தனையோ தடங்கல்களையும் இடையூறுகளையும் எதிர்பார்த்துத் தான் ஸ்ரீ சோமயாஜுலு மேற்படி பொறுப்பை ஒப்புக் கொண்டார். எதிர்பார்த்த அளவு இடைஞ்சல்கள் ஏற்படவில்லை. எதிர்பார்த்ததைக் காட்டிலும் பத்து மடங்கு அதிகமான இடைஞ்சல்கள் ஏற்பட்டன. ஒப்பற்ற நெஞ்சுத் துணிவோடும் தீரத்தோடும் அவற்றையெல்லாம் ஸ்ரீ சோமயாஜுலு சமாளித்தார்.

தூக்கமின்மையால் தலை சுற்றிக் கீழே விழும் வரையில் வேலை செய்தார். கால் ஓய்ந்து நடக்க முடியாமல் தள்ளாடும் வரையில் ஓடியாடி உழைத்தார். குளிக்கவும் சாப்பிடவும்கூட நேரமின்றிப் பாடுபட்டார். அந்தரங்க நண்பர்கள் பேரிலெல்லாம் எரிந்து விழக்கூடிய அளவுக்கு உழைத்தார். இப்படியெல்லாம் இணையற்ற தொண்டு செய்து, பாரதி மண்டபத் திறப்பு விழாவை அமோக வெற்றியுடன் நடத்தினார். ஒரு லட்சம் ஜனங்கள் ஒருமுகமாக வியந்து பாராட்டும்படி நடத்தினார்.

தொண்டர் தொண்டரான நண்பர் சோமயாஜுலுவை வாழ்த்துகிறோம். மகாகவி பாரதியின் ஞாபகார்த்தமாக அவர் செய்த ஒப்பற்ற தொண்டைப் போற்றுகிறோம். அவர் சிந்தையின் தீரம் நிரந்தரம் வாழ்கவென்று பிரார்த்திக்கிறோம்.

சங்கீத கலாநிதி ஸ்ரீ கே. பொன்னையா
பிள்ளை ஞாபகார்த்த நிதிக்காக
The Four Arts Presents
ஸ்ரீமதி சாந்தா
**பரத நாட்டியம்**
கனம் மந்திரி எம். பக்தவத்ஸலம்
அவர்கள் முன்னிலையில்
31-10-47, 1-11-47 ஆகிய
இரண்டு தினங்களிலும்
மாலை 6-15 மணிக்கு
மவுண்டுரோடு
பான்க்வெட்டிங் ஹாலில்

"ஸ்ரீமதி சாந்தா முதன் முதலாக நானவர்ணம் நடித்துக் காட்டுவார். சென்ற 50 வருஷங்களாக நான் இதை யாவர்க்கும் போதித்ததில்லை. பொது மக்கள் கண்டு களித்து அவர்களது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கக் கோருகிறேன்."

—பந்தநல்லூர் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை.

டிக்கெட்டுகள்: ரூ. 25, 10, 5, 3, 2



ARNI SILK HOUSE

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு புது மாதிரியான
உயர்ந்த ரக கொள்ளேகாலம் பட்டுச் சேலைகள்
ஸ்பெஷலாக தருவித்துள்ளோம்!
உடனே தங்கள் தேவைக்கு விஜயம் செய்யக் கோருகிறோம்.

**ஆரணி ஸில்க் ஹவுஸ்**
போன்: 86349
4, சன்னதித் தெரு, மயிலாப்பூர், மதராஸ்-4

பம்பாய் கிளை: நெ. 3, தேவ்ஜி-மேக்ஜி பில்டிங்ஸ்
பண்டேர்கார் ரோட் :: மாதுங்கா G. I. P.

டில்லி: சவுத் இந்தியன் கிளப் கோவாபரேடிவ்
சப்ளை சொஸைடி



கல்கி

மலர் 7 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 13

# என்ன சேதி?

## பெரிய வேடிக்கை

இரண்டும் இரண்டும் நாலு என்பதில் யாருக்காவது சந்தேகம் இருக்க முடியுமா? அதுபோலவே, ஜனங்களின் சம்மதமின்றி ராஜ்யத்தை ஆள முடியாது என்பதிலும் சந்தேகமிருக்க இடமில்லை. இது அவ்வளவு தெளிவான விஷயம். உலகம் முழுதும் ஒப்புக்கொண்ட நியதி. அப்படியிருந்தும்கூட, அவ்விஷயத்தில் சந்தேகங் கொண்ட அரசியல் சிசுக்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்! சாதாரண மனிதனுக்கு விளங்கும் மேற்படி உண்மை, ஆதிக்க வெறி பிடித்த நிர்வாக 'நிபுணர்'களான அரசியல் குழந்தைகளுக்குப் புலப்படுவதில்லை!

மலேயாவில் இன்று பிரிட்டிஷ் அதிகாரிகள் செய்துவரும் காரியங்கள் அத்தகையதாகவே இருக்கின்றன. மலேயாவைச் சுற்றி நாலாபுறங்களிலும் சுதந்திர எழுச்சி பிரமாதமாக இருந்து வருகிறது. பர்மா சுதந்திரம் அடைந்துவிட்டது. சியாம் வெகு காலமாகவே சுதந்திர நாடாகத் திகழ்ந்து வருகிறது. இந்தோ சீனாவிலும் இந்தோனேஷ்யாவிலும் உக்ரமான சுதந்திரப் போர் நடந்து வருகிறது. இவ்வாறாக, மலேயாவின் அஷ்ட திக்குகளும் சுதந்திர முரசொலியால் கிடு கிடுத்து வருகையில், பிரிட்டிஷார் மாத்திரம் மலேயாவில் பழைய பசலி அரசியல் திட்டமொன்றைப் புகுத்த முற்பட்டால், அது வெற்றி பெற முடியுமா? எனவே, அதைக் கண்டித்துச் சென்ற திங்கட்கிழமை மலேயா முழுதும் மகத்தான வேலை நிறுத்தம் நடந்திருக்கிறது. போக்கு வரத்து, துறைமுக அலுவல்கள், எல்லாம் ஸ்தம்பித்து நின்று விட்டன. சீனர்கள், இந்தியர்கள் எவரும் கடைகளைத் திறக்கவில்லை. மலேயா கவர்னர் ஜெனரலான மெல்காம் மெக்டொனல்டு, அந்த அரசியல் திட்டத்தில் குறைகள் இருக்கின்றன வென்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார். இருந்தாலும், ஏதோ கொடுத்ததைக் கொண்டு மலேயா ஜனங்கள் திருப்தியடைய வேண்டுமென்று உபதேசம் செய்கிறார்!

சுதந்திரம் பெற்றுள்ள நாடுகளாலும் சுதந்திரம் பெறப்போகும் நாடுகளாலும் சூழப்பட்டுள்ள மலேயா,—நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் தலைமையில் இந்திய தேசிய சர்க்காரின் கேந்திர ஸ்தானமாக விளங்கிய மலேயா, ஏதோ கிடைத்தது போதும் என்று திருப்தி யடைந்து விடுமா? மலேயா ஜனங்கள் கோருவது ஜனநாயக ஆட்சி முறையே. அதில் போதாதுக்கு இடமில்லை. அப்படியிருந்தும் பிரிட்டிஷார் தயவுகூர்ந்து கொடுத்ததைக் கொண்டு திருப்தி யடையுங்கள் என்று கவர்னர் ஜெனரல் கூறுவது பெரிய வேடிக்கைதான்.

## மர்மம் என்ன?

தற்போதைய வகுப்பு வெறி நீடிக்குமாயின் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் யுத்தம் ஏற்படலாம் என்று மகாத்மா காந்தி ஒரு தடவைக்கு மேல் கூறிவிட்டார். "சுதந்திர இந்தியாவின் அஸ்திவாரம் இன்னும் உறுதி பெறவில்லை. எனவே அதற்குள் ஏற்படும் கலகங்களால் அதன் அஸ்திவாரம் ஆட்டங்கண்டு விடும். பின்னர் பாரத நாடு, பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பையோ அல்லது வேறு அன்னிய நாட்டின் ஆக்கிரமிப்பையோ எதிர்த்து நிற்க முடியாமற் போகும்" என்று பண்டித ஜவாஹர்லால் நேரு நேற்று கூறியுள்ளார். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் யுத்த மேற்பட்டால், இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள்

பாகிஸ்தானை எதிர்த்தும் இந்தியாவின் சார்பிலும் போர் புரிவார்களா என்று ஐக்கிய மண்டல பிரதம மந்திரியும், மிகுந்த அறிவாளியும், உயர்ந்த தலைவர்களில் ஒருவருமான பண்டித கோவிந்த வல்லப பந்த் கேட்கிருர். அமைதியும் அஹிம்சையுமே உருவெடுத்த அத்தலைவர்கள், போரைப் பற்றிப் பிரஸ்தாபிக்க வேண்டிய அவசியம் என்ன நேர்ந்தது? காங்கிரஸ் தலைவர்கள் அவ்வாறு 'போர் முழக்கம்' செய்யலாமா வென்று சில முஸ்லிம் லீக் தலைவர்களும் ஒன்றுமே தெரியாதவர்கள் போல் அங்கலாய்க்கிருர்கள். ஆனல், நமது மாபெரும் தலைவர்கள் அவ்வாறு அடிக்கடி கூறி வருவதன் மர்மம் என்ன வென்பதைச் சகலரும் ஆய்ந்தோய்ந்து பார்க்க வேண்டும்.

## தகுந்த காரணம் உண்டு

சென்ற சில தினங்களாகப் பல முக்கிய நகரங்களிலிருந்தும் கணக்கற்ற வெடி குண்டுகள், துப்பாக்கிகள், பீரங்கிகள், வெடி மருந்துகள் முதலிய போர்த்தளவாடங்களைப் போலீஸார் கண்டுபிடித்து வருவது எல்லாரும் அறிந்ததே. சில மசூதிகள் ஆயுத சாலைகளாகவே மாறிவிட்ட விபரீதத்தையும்போலீஸார் கண்டு பிடித்திருக்கிருர்கள். அலகாபாத், அலிகார், கான்பூர், கல்கத்தா, டில்லி முதலிய பல நகரங்களிலும் முஸ்லிம்கள் வசிக்கும் பிரதேசங்களுக்குக் கீழே நிலவறைகளில் ஆயுதத் தொழிற்சாலைகள் வேலை செய்து வந்ததும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. ஆசியாவிலேயே மிகப் பெரியதான ஜபல்புரி ஆயுதசாலையிலிருந்து ஆயிரக்கணக்கான போர்த் தளவாடங்கள் திருட்டுத்தனமாக வெளியேறியிருக்கின்றன. அதையொட்டிப் பல உயர்தர ஆங்கில, முஸ்லிம் ராணுவ அதிகாரிகள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். மற்றும் போலீஸார் தினசரி நூற்றுக்கணக்கில் ஆயுத வகைகளைக் கைப்பற்றி வருகின்றனர். போலீசார் கண்டு பிடிக்க முடியாதவாறு இன்னும் எத்தனை ஆயுதங்கள் வெளியில் இருக்கின்றனவோ?

இந்நிலைமையில், இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் இந்திய சர்க்காரிடம் விசுவாசமாக இருக்கிருர்களா வென்று தலைவர்கள் அடிக்கடி சந்தேகப்படுவதற்கும், பாகிஸ்தான் இந்தியாவைப் போரில் இழுத்து விடுமோவென்று கலங்குவதற்கும் காரணம் வேறென்ன வேண்டும்?


*********************

# பாரதி மலர்

விலை ரூ. 2-8-0

★

அமரகவி பாரதியாரைப் பற்றி

டி. கே. சி.
கல்கி
தேசிக விநாயகம் பிள்ளை
சோமு
பாஸ்கரத் தொண்டமான்
முத்துசிவன்
தங்கம்மா பாரதி
கணேசன்
செல்லம்மா பாரதி

மற்றும் பலரும் மந்திரிகளும் எழுதியுள்ளார்கள். மூவர்ணப் படங்களும் மற்றும் ரஸிக்கும் கட்டுரைகளும் உண்டு. சொற்ப காப்பிகளே உள்ளன.

★

பாரதியார் படம் (பெரிது) 1-0-0
பாரதியார் படம் (சிறிது) 0-4-0

★

ஏஜண்டுகளுக்கு கமிஷன் உண்டு. வி. பி. யில் அனுப்ப முடியாது.

★

பாரதி மலர் பிரசுராலயம்
48, சுவாமி சன்னதித் தெரு
திருநெல்வேலி டவுன்

*********************






காலக யாத்திரை!

## நிகழ்ச்சிச் சித்திரம்

-சாஸ்திரி







# கௌரவம் நிலைக்க வழி

'காரியமாகும் வரையில் காலைப் பிடிப்பது, பிறகு மென்னியைப் பிடிப்பது' என்று சொல்லுவதுண்டு.

இன்று தென்னாப்பிரிக்கா, மலேயா சர்க்கார்கள் அந்தத் தேசங்களிலுள்ள இந்தியர்கள் விஷயத்தில் அம் முறையையே அனுஷ்டித்து வருகின்றனர்.

மலையும் காடுமாகக் கிடந்த மலேயாவைப் பண்படுத்திப் பொன் விளையும் பூமியாகச் செய்தவர்கள் இந்தியத் தொழிலாளர்களே.

பொட்டைத் திடலாகக் கிடந்த நேட்டால் பிரதேசத்தையும் சுபிட்ச பூமியாகச் செய்தவர்கள் இந்தியத் தொழிலாளர்கள் தான்.

இதை பிரிட்டிஷ் மந்திரிகளும், தென்னாப்பிரிக்கா மந்திரிகளும் ஒரு சமயம் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். மேற்படி சர்க்கார்களும் இந்தியத் தொழிலாளர்களுடைய உழைப்பின் உயர்வை அறிக்கைகளின் மூலம் பாராட்டி யிருக்கின்றார்கள்.

ஒரு நூற்றாண்டுக்கு முன் இந்தியத் தொழிலாளர்களை வருந்தி யழைத்த அந்தச் சர்க்கார்கள் இப்போது கூசாமல் அவர்களை ஒதுக்கி வைக்கவும், உரிமை வழங்க மறுக்கவும் முற்பட்டிருக்கின்றனர்.

நமது தொழிலாளர்கள் பெண்டு பிள்ளைகளையும் உற்றார் உறவினரையும் பிரிந்து சென்று, தங்களுடைய உழைப்பினால் மாத்திரமல்ல, உதிரத்தினாலும் அந்த நாடுகளைப் பண்படுத்தியுள்ளனர். ஏனெனில், அந்த நாடுகளின் ஏகபோக உரிமையான நோய்களுக்கு இது வரை பலியாகியுள்ள தொழிலாளர்களின் தொகை அற்ப சொற்பமல்ல.

அப்படி யெல்லாம் இருந்தும், குறிப்பாகத் தென்னாப்பிரிக்க சர்க்கார் நன்றி கெட்டதனமாக நடந்துகொண்டிருப்பதுடன், பழைய ஒப்பந்தங்களையும் காற்று வாக்கில் விட்டு விட்டார்கள்.

* * *

இந்தியத் தொழிலாளர்கள் சுமார் நூறு வருஷங்களுக்கு முன்னரே தென்னாப்பிரிக்கா சென்று விட்டதால், தற்போது அங்குள்ள இந்தியர்களில் எண்பது சத விகிதப் பேர்கள் அங்கேயே பிறந்தவர்கள். அவர்கள் இந்தியாவைப் பார்த்ததுகூடக் கிடையாது.

அப்படி யிருக்க, நிற வேற்றுமை காரணமாக அவர்களைத் தனி சேரிகளில் ஒதுக்கி வைப்பதெனில் அதைக் காட்டிலும் அக்கிரமம் வேறென்ன இருக்க முடியும்?

மேற்படி அக்கிரமத்தைக் கண்டித்து ஐக்கிய நாடுகள் சபையில் சென்ற வருஷம் நிறைவேறிய தீர்மானத்தையும் ஜெனரல் ஸ்மட்ஸைத் தலைவராகக் கொண்ட தென்னாப்பிரிக்க சர்க்கார் நிறைவேற்றவில்லை.

ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்பது போல, தென்னாப்பிரிக்க சர்க்கார் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றாததுடன், இந்தியர்கள் மீது அடக்குமுறைப் பிரயோகத்தையும் இரட்டிப்பாக்கி விட்டார்கள்.

உலகில் அமைதியையும் ஜனநாயக முறையையும், அமுலுக்குக் கொண்டு வருவதற்காக ஏற்பட்ட ஐ. நா. சபை, தென்னாப்பிரிக்க சர்க்காரின் அடங்காப் பிடாரித்தனத்தைக் குறித்து என்ன செய்யப் போகிறது?

மேற்படி சர்வதேச சபையின் தீர்மானங்கள் ஏட்டுச் சுரைக்காயாவதெனில், அச் சபை இருந்துதான், என்ன பலன்?

யாதொரு பலனுமற்ற ஒரு ஸ்தாபனத்துக்காக பிரமாதமாக ஆடம்பரம் செய்வதும், பெருந்தொகை செலவழிப்பதும், அதில் ஒவ்வொரு நாடும் தங்கள் பங்குத் தொகையைக் கொட்டியழுவதும் எதற்காக?

ஒரு சிறிய நாட்டின் விபரீதத்தை அடக்க முடியாத ஒரு சபை, பிரம்மாண்டமான உலகில் அமைதியையும் நீதியையும் எவ்வாறு நிலைநிறுத்த முடியும்?

இந்தியர்கள் சம்பந்தமாக அச் சபையில் நிறைவேறிய ஒரு தீர்மானத்தை மாத்திரம் தென்னாப்பிரிக்கா அலட்சியம் செய்ய வில்லை; மற்றொரு முக்கிய தீர்மானத்தையும் அது மதித்து நடக்க மறுத்து விட்டது.

அதாவது தென் மேற்கு ஆப்பிரிக்காவை ஐக்கிய நாடுகளின் நிர்வாகத்

தில் விட்டுவிட வேண்டுமென்று சில மாதங்களுக்கு முன் ஐ. நா. சபையில் நிறைவேறிய தீர்மானத்தையும் தென்னாப்பிரிக்க சர்க்கார் லட்சியம் செய்யவில்லை.

உலகப் பிரதிநிதிகளை ஒன்று கூட்டி, பல நாட்கள் வரையில் விவாதித்து நிறைவேற்றும் தீர்மானங்களை, சம்பந்தப்பட்ட நாடுகள் அமுலுக்குக் கொண்டுவராவிடில், பிறகு உலக அமைதியைப் பாதுகாப்பது எப்படி?

*　　　*　　　*

அந்தகைய விபரீதமான நிலைமைக்கு ஏதாவது பரிகாரம் தேட வேண்டுமென்ற நோக்கத்துடனேயே சில தினங்களுக்கு முன் அச் சபையில் இந்தியப் பிரதிநிதி ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்.

ஐக்கிய நாடுகள் மகா சபையின் அடுத்த கூட்டத்துக்குள், தென் மேற்கு ஆப்பிரிக்கா நிர்வாகத்தை அச் சபையின் மேற்பார்வையில் விடும் விஷயமாகத் தென்னாப்பிரிக்கா ஓர் ஒப்பந்தத்தைச் சமர்ப்பிக்க வேண்டுமென்பதே அந்தத் தீர்மானமாகும்.

அதற்குச் சாதகமாக இருபத்தேழு பிரதிநிதிகளும், பாதகமாக இருபது பிரதிநிதிகளும் வோட்டுக் கொடுத்ததால் அது நிறைவேறியது.

சர்வதேச மகாசபையொன்றில் இந்தியாவின் தீர்மானம் பெரும்பான்மையான வோட்டுக்களால் நிறைவேறியிருப்பது இந்தியாவின் கௌரவத்தையே காட்டுகிறது.

பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ் முதலிய வல்லரசுகள் அத் தீர்மானத்தை எதிர்த்தும்கூட, இந்தியாவின் தீர்மானம் நிறைவேறியிருப்பதிலிருந்து, உலக நாடுகளிடையே இந்தியா மேற்படி வல்லரசுகளைக் காட்டிலும்கூட அதிக செல்வாக்கு பெற்றிருக்கிறதென்பது தெரிகிறது.

இந்தியாவின் தீர்மானத்தை எதிர்த்த அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் முதலிய தேசங்கள், ஏற்கெனவே அச் சபையில் நிறைவேறிய தீர்மானத்தை மீறி நடக்கும் விஷயமாக, அறிந்தோ அல்லது அறியாமலோ, தென்னாப்பிரிக்காவுக்கு உதவி புரிந்திருக்கின்றன என்றே சொல்ல வேண்டும்.

ருஷ்யாவிடம் மிகவும் கண்டிப்பாக இருக்கும் அமெரிக்கா, ஐ. நா. சபையின் அஸ்திவாரமான கொள்கைக்கே முரணாக நடந்து கொள்ளும் பிரான்ஸ், நெதர்லண்ட்ஸ், தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளின் விஷயத்தில் மாத்திரம் சலுகை காட்டுவதன் நோக்கமென்ன?

எனவே, ஐ. நா. ஸ்தாபனத்தை அமெரிக்கா தன்னுடைய கருவியாக உபயோகிக்க முயற்சித்து வருகிறதென்று ருஷியப் பத்திரிகைகள் புகார் கூறுவதற்குக் காரணம் இருக்கத்தான் செய்கிறது.

*　　　*　　　*

இந்தோனேஷ்யாவில் போர்ப்புயல் அடங்கியதும் அடங்காதுமாக இருந்து வருகையில் இந்தோ சீனாவில் மீண்டும் பிரஞ்சுத் துருப்புகள் படுகொலைப் படலத்தை ஆரம்பித்து விட்டன.

முன்பு டச்சு சர்க்கார் இந்தோனேஷ்யாவில் செய்தது போல், பிரஞ்சு சர்க்காரும் இந்தோ சீனாவில் ஒரு பொம்மை சர்க்காரை அமைக்க முயற்சித்து வருகிறார்கள்.

டச்சு சர்க்காரிடமும், தென்னாப்பிரிக்க சர்க்காரிடமும் ஐ. நா. ஸ்தாபனம்,—அந்த ஸ்தாபனத்தை ஆட்டி வைக்கும் அமெரிக்கா, பிரிட்டன் முதலிய நாடுகள் கண்டிப்பாக நடந்துகொண்டிருந்தால் பிரஞ்சு சர்க்கார் இந்தோ சீனாவில் மீண்டும் போரை ஆரம்பிக்கத் துணிந்திருக்க மாட்டார்கள்.

எனவே, பிரஞ்சு சர்க்காரின் அக்கிரமத்தைக் குறித்து ஐக்கிய நாடுகளின் சபையிடம் முறையிடும்படி வியட்னாம் தலைவரான டாக்டர் ஹோ சி மின் இந்திய சர்க்காரைக் கேட்டுக் கொண்டிருப்பதுடன், வியட்னாம் நிலைமையை நேரில் வந்து பார்ப்பதற்காக இந்தியத் தலைவர்களடங்கிய கோஷ்டியொன்றை இந்தோ சீனாவுக்கு அனுப்பும்படியும் நேருஜியை வேண்டிக் கொண்டிருக்கிறார்.

இந்தோனேஷ்யப் பிரச்னையை ஐ. நா. சபையில் கொண்டு வந்து போராடியவர்கள் இந்தியப் பிரதிநிதிகள்தான்.

தென்னாப்பிரிக்காவின் நெறி கெட்ட போக்கை அச்சபையில் அம்பலப்படுத்தியவர்களும் இந்தியப் பிரதிநிதிகள்தான்.

அதனால்தான் இப்போது இந்தோ சீனாவின் இளையற்ற தலைவரும் இந்தியாவின் உதவியை நாடியிருக்கிறார்.

ஆசியா நாடுகளுக்காக மாத்திரமின்றி உலகிலுள்ள ஏழ்மையான நாடுகள் எல்லாவற்றிற்கும் நீதி கிடைக்க வேண்டுமென்பதில் இந்தியா எவ்வளவு சிரத்தையுடனிருந்து வருகிறதென்பதை, ஐக்கிய நாடுகள் சபையின் நிகழ்ச்சிகள் உலகத்துக்கு எடுத்துக் காட்டுமென்பது நிச்சயம்.

எனினும், அந்தச் சபையில் போராடுவதாலோ, அல்லது தீர்மானங்கள் நிறைவேற்றுவதாலோ உருவான பலன் ஏதாவது ஏற்படுமா வென்பதே இப்போதைய கேள்வியாகும்.

பலன் ஏற்பட்டாலன்றி, ஐ.நா. சபை வெறும் ஆடம்பர சபையாகி விடும்.

இந்த உண்மையை மகாத்மா காந்தியும் வற்புறுத்தி யிருக்கிறார்.

"ஐக்கிய நாடுகள் சபையின் கௌரவம் நிலைத்து அதனால் உலகத்துக்கும் நன்மை ஏற்பட வேண்டுமாயின், தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களுக்கு நீதி கிடைக்கும்படி அச் சபை பார்த்துக் கொள்ள வேண்டும். நேர்மையுடன் நடந்து கொண்டால்தான் அச் சபை சீரும் சிறப்பும் பெற்று விளங்க முடியும்" என்று காந்திஜி கூறியிருப்பதை முக்கியமாக அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வல்லரசுகள் கவனிக்க வேண்டியது அத்தியாவசியமாகும்.

*　　　*　　　*

மற்றும் மேற்படி சர்வதேச ஸ்தாபனத்தைக் கட்சி வேற்றுமை எவ்வளவு தூரம் சீர்குலைத்து வருகிறதென்பதையும் சமீப கால நிகழ்ச்சிகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

அதாவது பிரிட்டனும் அமெரிக்காவும் ஒரு கட்சியாகவும், ருஷியா ஒரு கட்சியாகவும் இருந்து வருகின்றன.

உலக நாடுகளில் சில ஒரு கட்சியைச் சேர்ந்தவை; மற்றும் சில வேறொரு கட்சியைச் சேர்ந்தவை.

ஒரு பிரச்னையின் நியாய அநியாயத்தைப் பரிசீலனை செய்யாமல் சில நாடுகள் எப்பொழுதும் பிரிட்டனும் அமெரிக்காவும் சாயும் பக்கமே வோட்டுக் கொடுக்கும். மற்றும் சில ருஷியாவின் பக்கமே வோட்டுக் கொடுக்கும்.

சர்வ தேச க்ஷேமத்துக்காக ஏற்பட்ட ஒரு மகா சபையின் யோக்கியதை அவ்வாறு இருந்தால் என் செய்வது?

உதாரணமாக, ஐ. நா. பாதுகாப்பு சபையில் ஏற்பட்ட ஒரு காலி ஸ்தானத்துக்குப் பதினோரு தடவைகள் தேர்தல் நடந்தும் யாதொரு முடிவும் ஏற்படவில்லை!

அவ்விஷயமாக ருஷ்யா கட்சியைச் சேர்ந்த உக்ரேனுக்கும் எந்தக் கட்சியையும் சேராத இந்தியாவுக்குமே போட்டி ஏற்பட்டிருக்கிறது.

பாதுகாப்பு சபையில் ஸ்தானம் பெற விரும்பும் நாடு மூன்றில் இரண்டு மடங்கு வோட்டுகள் பெற வேண்டும். ஆனால், மேற்படி தேர்தலில் இந்தியாவுக்கும் உக்ரேனுக்கும் சற்றேறக் குறைய சமமான வோட்டுகளே கிடைத்து வருகின்றன.

இந்தியா பெரிய நாடு. தவிர, மேற்படி சபையில் ஆசிய நாடுகளுக்குப் போதிய ஸ்தானங்கள் இல்லை. எனவே, இந்தியாவின் கோரிக்கை முற்றிலும் நியாயமாகும். ஆனால், அப்பிரச்னை பல நாட்களாக இழுத்துப் பறித்துக் கொண்டிருப்பதிலிருந்து, ஐக்கிய நாடுகளின் போக்கை ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம்.

எனவே, ஐ. நா. ஸ்தாபனத்தின் கௌரவம் நிலைத்து, அது உலகம் உய்ய காரியம் புரிய வேண்டுமாயின், அதன் பிரதிநிதிகள் கட்சி வேற்றுமைகளையும் பாரபட்சமான போக்கையும் விட்டொழித்து, உலக தேசங்களின் உறுதியான நம்பிக்கையைப் பெற வேண்டும்.

## இரண்டாவது பரிசு

சென்ற வருஷத்துச் சிறுகதைப் போட்டிப் பரிசுக் கதைகளில் "கண்ணாமூச்சி" என்ற கதை ஏற்கெனவே வேறொரு பத்திரிகையில் வெளியானது என்று தெரிய வந்ததால் அதற்கு இரண்டாவது பரிசுத் தொகை ரூ. 100 அனுப்பப்படவில்லை என்று முன்பே அறிவித்திருந்தோம். மேற்படி பரிசுத் தொகை, பிரசுரத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போட்டிக் கதைகளில் ஒன்றான "ரோகிணி எங்கே?" என்ற சிறு கதையை எழுதிய ஸ்ரீ பி. எஸ். சேஷாத்திரிக்கு அனுப்பி யிருக்கிறோம்.

# தமிழ் உயர்ந்தது!

★ ★ ★

தமிழ் நாடு உயர்ந்தது! தமிழ் மக்களின் சீர் உயர்ந்தது! தமிழும் தமிழ் நாடும் தமிழ் மக்களின் பேரும் இமயத்தைப்போல் உயர்ந்தன! இமயத்துக்கப்பாலும் ஆசியாக் கண்டம் முழுவதிலும் சிறந்தன!

"இதுகாறும் ஆசியாவிலேயே இம்மாதிரி ஒரு கவிஞருக்கு ஞாபகச் சின்ன மண்டபம் கட்டியதில்லை! இவ்வளவு சிறப்பாக விழாவும் நடந்ததில்லை!" என்று பேராசிரியர் திரு சோமசுந்தர பாரதியார் பாரதி மண்டப விழா மேடைமீது கூறினார்.

இவ்வாறு தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கும் சிறப்புத்தரும் கைங்கரியத்தை இனிது நிறைவேற்றி வைத்த இறைவன் திருவருளை ஆயிரங் கோடி முறை வாழ்த்துகிறேன்.

ஒரு நாளையத் திருநாளுக்காக ஒரு லட்சம் ஜனங்கள் கூடிக் கலந்தார்கள். திருவிழாப் பந்தலில் ஐம்பதினாயிரம் பேர் வந்து குவிந்தார்கள். இவர்களில் பெண்மணிகள் மட்டும் பத்தாயிரம் பேர் இருக்கும். இவ்வளவு பெருங் கூட்டத்தில், இத்தகைய நெருக்கடியில், ஒருவிதமான துர்ச்சம்பவமும் நேரிடவில்லை. ஒருவருக்கு ஒரு சிறு காயமும் ஏற்படவில்லை. எந்தவிதமான சேதமோ, நஷ்டமோ யாரும் அடையவில்லை. இவ்வளவு மங்களகரமாகத் திருவிழா நடந்தேறக் கருணை புரிந்த ஆண்டவன் திருவருளை மீண்டும் மீண்டும் வாழ்த்தி வணங்குகிறேன்.

எட்டயபுரத்துக் கரிசல் பூமியில் மழை பெய்தால், ஒரு நொடியில் கரிசல்மண் சேறாகி யானையைக்கூட உள்ளே இழுத்துக் கொண்டு விடும் என்று எச்சரிக்கை செய்திருந்தார்கள். சென்ற பத்து வருஷத்துக் கணக்குப் பார்த்ததில் அங்கே அக்டோபர் மாதத்திலேதான் சராசரி மழை அதிகம் என்று கண்டு பிடித்துச் சொன்னார்கள். எனினும், செப்டம்பர் மாதத்தில் தேதி குறிப்பிட்டிருந்த திருவிழாவைக் கட்டாயமாக அக்டோபர் மாதத்துக்குத் தள்ளிப்போட வேண்டி நேர்ந்தது. அதற்கு மேலே தள்ளிப் போடவும் முடியவில்லை.

எனவே, மழையை எதிர்பார்த்து விஸ்தாரமான கொட்டகைப் பந்தல் போடப்பட்டிருந்தது. இன்னும் ஏதேதோ ஏற்பாடுகளும் செய்திருந்தனர். எனினும், என்ன பிரயோஜனம்? 11௳ மாலை நாலரை மணிக்குத் தொடங்கி ஒன்றரை மணி நேரம் கொட்டிய மழையின் பலனைக் கண்டதும் திருவிழா நிர்வாகிகளுக்கு ஒரே பீதியாய்ப் போய்விட்டது. பந்தலுக்குள் மகாஜனங்கள் உட்காரவேண்டிய இடப் பகுதிகள் சேறும் தண்ணீருமா யிருந்தன! நாளை 12௳ மாலையும் இப்படிப் பெரு மழை பெய்யுமா? பெய்தால், திருவிழா ஏற்பாடுகளெல்லாம் அகோராகாரத்தான்!

12௳ மாலை ஏறக்குறைய அதே நேரத்துக்குக் கருமேகங்கள் திரண்டு வந்தன. குளிர்ந்த மழைக்காற்று வீசிற்று. அதிசயம்! அதிசயம்! — அரைமணி நேரத்தில் அவ்வளவு மேகங்களும் விரைந்து கரைந்து மாயமாய் மறைந்து போயின. அவ்விதமே நள்ளிரவில் திரண்டு வந்த மேகங்களும் சில நீர்த் துளிகளைத் தெளித்து விட்டு அகன்று சென்றன. மாலையில் மழை பெய்திருந்தால் கச்சேரி கேட்கக் கூடியிருந்த ஐம்பதினாயிரம் ஜனங்களிடையில் அல்லோல கல்லோலம் ஏற்பட்டிருக்கும். இரவில் மழை பெய்திருந்தால் மறுநாள் காலையில் நடைபெற வேண்டிய திறப்பு விழா ஏற்பாடுகள் எல்லாம் தொலைந்து போயிருக்கும். இவ்வளவு சங்கடங்களும் ஏற்படாமல் மழையை விலக்கி அருள் புரிந்த கருணை நிதிக்கு மன மொழி மெய்களால் நன்றி செலுத்துகிறேன்.

* * *

பாரதி மண்டபத் திறப்பு விழாவுக்கு அபரிமிதமான ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் விஜயம்செய்து நடத்திக்கொடுத்த ஒரு லட்சம் தமிழ்ப் பெரு மக்களுக்கும் தலை வணங்கி வந்தனம் கூறுகிறேன். 11௳ யன்றே எட்டயபுரம் திருவிழாக் கோலம் பூண ஆரம்பித்து விட்டது. 12-௳ பிற்பகலுக்குள்ளே எட்டயபுரத்தில் காங்கிரஸ் மகாசபை கூடுகிறதோ என்று சொல்லும்படி யாகிவிட்டது.

கல்கி

ஒரு சங்கீதக் கச்சேரிக்கு ஐம்பதினாயிரம் ஜனங்கள் ஒரு பந்தலுக்குள் கூடி அமர்ந்து கச்சேரி முழுதும் கேட்டுக் கலவரம் இன்றி அமைதியாகக் கலைந்து போன அதிசயத்தை நம் வாழ்நாளில் எங்கும் கண்டதில்லை. எட்டயபுரத்திலே 12-௳ யன்று அத்தகைய அதிசயத்தைக் கண்டோம்.

மறுநாள் 13-௳ காலையில் திருவிழாப் பந்தலில் ஐம்பதினாயிரம் பேர் காலை ஐந்து மணி முதல் கூடத் தொடங்கிப் பதினொரு மணி வரையில் அமர்ந்திருந்தார்கள். காலை ஆகாரமோ காப்பியோ ஒருவரும் சாப்பிடவில்லை. ஆயினும் பொறுமையோடு நிகழ்ச்சி முடியும் வரையில் காத்திருந்தார்கள். அவர்களில் ஒரு ஆயிரம் பேர் எழுந்துபோக முயற்சித்திருந்தால் கூட்டத்தில் கலவரம் ஏற்பட்டிருக்கும். அவ்விதம் ஒன்றும் நேரவில்லை. அவ்வப்போது இடவசதிக்காகவும், முன்னால் நின்று மறைந்தவர்களை உட்காரும்படியும் சிலர்போட்ட சத்தத்தைத் தவிர வேறு அமைதிக்குப் பங்கம் ஏற்படவில்லை.

பந்தலுக்குள் இடம் கிடைக்காத சுமார் ஐம்பதினாயிரம் ஜனங்கள் வெளியில் சாலை ஓரங்களில் நின்று தலைவர்கள் வருகையைப் பார்த்துவிட்டும், ஒலிபெருக்கிகளின் மூலம் பேச்சுக்களை ஓரளவு கேட்டுவிட்டும் சென்றார்கள். அவர்களில் பத்தாயிரம்பேர் பந்தலுக்குள் பிரவேசிக்க முயற்சித்திருந்தால் ஏற்பாடுகள் எல்லாம் சீர்குலைந்திருக்கும்; அப்படி அவர்கள் செய்யவில்லை.

இவ்வாறெல்லாம் அமைதியாகவும் ஒழுங்காகவும் நடந்துகொண்டு திருவிழாவை மகத்தான வெற்றியுடன் நடத்திக்கொடுத்த தமிழ்ப் பெருமக்களை வணங்குகிறேன்.

'பாரதியார் பிறந்த ஊரில் அவருக்கு ஞாபகார்த்த மண்டபம் கட்டவேண்டுமென்று சொன்னதும் தமிழ் மக்கள் போட்டி போட்டுக்கொண்டு பணம் அனுப்பினார்கள். நாற்பதினாயிரத்தில் நிதி வசூலை நிறுத்தி வைத்தோம். பிற்பாடு பணம் போதவில்லையென்று கேட்டதும், மீண்டும் தமிழ் மக்கள் பணம் உதவினார்கள். பிறகு, திருவிழா நடத்தத் தனியாகப் பணம் வேண்டும் என்று சொன்னதும் மறுபடியும் பணம் கொடுத்துதவினார்கள். ஒரு கவிஞரின் ஞாபகார்த்தக் கைங்கரியத்துக்கு இப்படியெல்லாம் நன்கொடை வழங்கிய தமிழ் மக்களின் வள்ளன்மைக்கு உவமையே கிடையாது. எத்தனை தான் அதைப் பாராட்டினாலும் போதியதாகாது.

* * *

தமிழ் மக்களுக்கு அடுத்தபடி நமது நன்றிக்கு உரியவர்கள் தமிழ்மக்களின் பிரதிநிதிகளாக மந்திரி பதவி வகித்து ஆட்சி நடத்தும் தமிழ் மந்திரிகள் ஆவார்கள். இரண்டாவது நிதி வசூல் ஆரம்பித்தவுடனேயே பிரதம மந்திரி ரெட்டியார் ரூபாய் நூறு நன்கொடை அளித்துத் திருவிழாவுக்குச் சர்க்காரின் பூரண ஆதரவு உண்டு என்று தெரியப்படுத்தினார். திருவிழாவுக்குப் பல மாதங்களுக்கு முன்பே கல்வி மந்திரி ஸ்ரீ அவிநாசிலிங்கம் செட்டியார் முக்கியமான பூர்வாங்க உதவி ஒன்று செய்து கொடுத்தார். உணவு மந்திரி டாக்டர் ராஜன் அவர்கள் முதலில் நான் விண்ணப்பம் செய்து கொண்டதும் ஒரே கோபமாய்க் கோபித்துக் கொண்டவர், ஒரு வாரத்திற்கெல்லாம் மன மாறுதல் அடைந்தார்; வெளியூர்க்காரர்களுக்கு இரண்டு வேளை உணவு அளிக்க அநுமதி தந்தார். பாரதி மண்டபத்துக்கு அடுத்தாற்போலிருந்த கள்ளுக் கடையை வேறிடத்துக்கு அப்புறப்படுத்த கனம் ஸ்ரீ டேனியல் தாமஸ் செய்த உதவியை மறக்க முடியாது. அதோடு, கோவில்பட்டி—எட்டயபுரம் சாலையில் திருவிழா தினங்களில் நாலு நிமிஷத்துக்கு ஒரு பஸ் ஓடும்படி செய்து பெரும் புண்ணியத்தை அவர் கட்டிக் கொண்டார்.

பஸ்ஸுகள் ஓடுவது சரிதான். ஆனால், பஸ்ஸுகள் ஓடக் கூடிய சாலை வேண்டாமா? திருவிழாவுக்கு ஒரு மாதத்துக்கு முன்னால் கோவில்பட்டி எட்டயபுரம் சாலையில் குழிகள், குட்டைகள், குளங்கள், ஏரிகள், பள்ளத்தாக்குகள், குன்றுகள், மலைகள் எல்லாம் குடிகொண்டிருந்தன. அப்பேர்ப்பட்ட சாலையைப் போக்கு வரவுக்குத் தகுதியாகச் செய்து கொடுத்தார் நமது மராமத்து இலாகா மந்திரி ஸ்ரீ பக்த வத்ஸலம். அவரது உதவியை நினைக்கும் போதெல்லாம் பின்வரும் பாடல் என் உள்ளத்தில் பொங்கி வருகிறது :—

"வாழ்க நீஎம்மான்! இந்த
வையத்து ரோட்டிலெல்லாம்
தாழ்வுற்றுக் குழி விழுந்து
தடுமாறி விழுதற் கேற்பப்

பாழ்பட்டுக் கிடந்த ரோட்டைப்
பள்ளமும் மேடும் இன்றி
வாழ்விக்க வந்த பக்த
வத்ஸல மந்திரியே! வாழி!"

இவ்விதம் ஒரு சிறந்த கவிதையைப் பாழ் படுத்தியதற்காகப் பாரதியாரின் ஆவியும், மகாத்மா காந்தியும், பக்தவத்ஸல மந்திரியும் என்னை மன்னிப்பார்களாக!

அவ்வளவு பெரிய மகாசபையில் தங்கள் பாரதி பக்தியைக் காட்டியே தீரவேண்டுமென்று பலர் சீட்டு அனுப்புவதும், அதைக் கண்டு ராஜாஜி கோபிப்பதும், அடியேன் திணறுவதுமாயிருந்த சமயத்தில், "பேசிப் பயன் என்னடி?" என்னும் பாரதியாரின் வாக்கைக் கடைப் பிடித்து, "பேசவே முடியாது!" என்று பிடிவாதம் பிடித்து, திருவாவடுதுறை மடத்தார் அனுப்பி வைத்த இரண்டு அழகிய வெள்ளிக் குத்து விளக்குகளைப் பாரதி மண்டபத்துக்கு அளிப்பதுடன் திருப்தியடைந்த டாக்டர் சுப்பராயன் அவர்களுக்கு நான் மிகவும் கடமைப் பட்டிருக்கிறேன். ஒரு லட்சம் ஜனங்கள் விஜயம் செய்த திருவிழாவில் ஜில்லா அதிகாரிகளின் ஒத்துழைப்பின்றி எதுவும் செய்திருக்க முடியாது. அந்த ஒத்துழைப்புப் பரிபூரணமாய்க் கிடைப்பதற்கு உள்நாட்டு மந்திரி டாக்டர் சுப்பராயன் காரணமாயிருந்தார்.

மொத்தத்தில் ஸ்ரீ பிரகாசம் காருவின் மந்திரி சபை மாறிப் புது மந்திரி சபை வந்ததே பாரதியார் திருவிழாவை உத்தேசித்துத்தானோ என்று நான் பல முறை எண்ணமிட்டதுண்டு. ஓமந்தூர் ரெட்டியாரின் புது மந்திரி சபை வந்திரா விட்டால் எட்டயபுரம் விழாவை இவ்வளவு சிறப்பாக ஒருநாளும் நடத்தியிருக்க முடியாது என்பது நிச்சயம். வரகவியும், பராசக்தி பக்தருமான பாரதியாரின் சக்தி எப்படியெல்லாம் வேலை செய்தது என்பதை யாரால் நிர்ணயிக்க முடியும்?

* * *

மந்திரிமார்கள் என்னதான் உத்தரவு போட்ட போதிலும் நடத்திவைக்கும் உத்தியோகஸ்தர்கள் உற்சாகமாக ஒத்துழைத்தாலன்றிக் காரியம் நடைபெற முடியாது. பாரதி மண்டப விழாவிற்குச் சகல சர்க்கார் இலாகாக்களிலிருந்தும் பூரண ஒத்துழைப்புக் கிடைத்தது. திருநெல்வேலி ஜில்லா கலெக்டர், ஜில்லா போலீஸ் சூபரின்டெண்டு, கோவில்பட்டி டிபுடி கலெக்டர், தாசில்தார் எல்லாரும் ஒத்துழைத்தார்கள். தூத்துக்குடி டிவிஷன் டெபுடி சூபரின்டெண்டு ஸ்ரீ வேங்கடேசுவாலு இந்த விழாவுக்குச் செய்திருக்கும் உதவி விவரிக்க முடியாதது. அவருடைய தலைமையில் போலீஸார் அத்தனை பேரும் காங்கிரஸ் தொண்டர்களைப்போன்ற பணிவுடனும், உற்சாகத்துடனும், ஆனால் அதிகக் கட்டுப்பாட்டுடனும் தொண்டு செய்தார்கள். பாரதியார் அந்தக் காட்சியைப் பார்த்திருந்தால் சுதந்திர இந்தியாவில் போலீஸாரின் மாறுதலைப்பற்றி அற்புதமான கவிதை புனைந்திருப்பார்.

இன்னும் இன்ஜினியரிங் இலாகா, மின்சார இலாகா, தபால் இலாகா, தந்தி இலாகா சிப்பந்திகள் எல்லாரும் எவ்வளவு சுமுகமாகவும் உற்சாகமாகவும் அதிகப்படி வேலைகளைச் சமாளித்தார்கள் என்பது பெரிதும் பாராட்ட வேண்டிய விஷயம்.

* * *

சிறப்பு விழாவை இந்த வருஷம் நடத்துவது என்று தீர்மானித்த உடனேயே திருநெல்வேலி ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டியின் ஒத்துழைப்பைக் கோரினேன். கமிட்டியின் தலைவர் ஸ்ரீ ஏ. பி. சி. வீரபாகு மனமுவந்து ஒத்துழைப்பதாக வாக்களித்ததுடன், ஸ்ரீ சோமயாஜுலுவை இந்தத் திருப்பணிக்காகக் கொடுத்து உதவினார். இதைக் காட்டிலும் சிறந்த உதவி ஜில்லாக் கமிட்டியார் செய்திருக்க முடியாது.



விட்டலபுரம்
ஸ்ரீ வேங்கடாச்சாரி
(இரண்டாவது பாரதி மண்டப நிதியை ரூபாய் நூறு கொடுத்து ஆரம்பித்து வைத்தவர்)

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தொண்டர் கூட்டத்தில் எனக்கு அதிகப் பழக்கமில்லாதவர் ஸ்ரீ சோமயாஜுலு. உண்மையில் ஐந்தாறு மாதமாகத்தான் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு நேர்ந்தது. திருநெல்வேலி ஜில்லாவில் ஆலயப் பிரவேச இயக்



கத்தை அவர் நடத்தி வைத்த தோரணையைப் பார்த்த பிறகு, எட்டயபுரம் விழாவின் பொறுப்பை இவருடைய விசாலமான தோள்களிலே சுமத்தி விடுவது என்று தீர்மானித்தேன். திறமையாகச் சமாளித்து நடத்துவார் என்ற நம்பிக்கையுடனேதான். அந்த நம்பிக்கை இவ்வளவு அற்புதமான முறையில் நிறைவேறும் என்று எண்ணவில்லை.

வெளியூரிலிருந்து வருகிறவர்களுக்கு உணவு அளிக்கலாம் என்று சர்க்கார் அநுமதி தந்தார்கள். "ஆனால் உணவுப் பொருள்களை நீங்களே சேகரித்துக் கொள்ள வேண்டும். கவர்ன்மெண்டு டெப்போக்களிலிருந்து ஒரு மணி அரிசி தரமுடியாது" என்று சொல்லி விட்டார்கள்.

"அதற்கென்ன? அரிசி நான் சேகரிக்கிறேன்!" என்றார் ஸ்ரீ சோமயாஜுலு.

எட்டயபுரத்துக்குச் சுற்று வட்டாரத்தில் நெல் வயலையே காண முடியாது. வெகு தூரங்களிலிருந்து அரிசி சேகரித்துக் கொண்டு வர வேண்டியிருந்தது. சர்க்கார் அதிகாரிகள் 'புரொக்யூர்மெண்ட்' திட்டப்படி சுரண்டிக் கொண்டு போனது போக, மிச்சம் குடித்தனக்காரர்கள் சாப்பாட்டுக்காக வைத்துக் கொண்டதிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகச் சேகரித்துக் கொண்டு வந்து சேர்த்தார்.

இதுமட்டுமா? பருப்பும், மிளகாயும், வெல்லமும், சர்க்கரையும், வெங்காயமும், கறிகாய்களும் கொண்டு வந்து குவித்தார்.

கார் கிடைத்த போது காரிலும், கார் இல்லாத போது பஸ்ஸிலும், பஸ் இல்லாத போது லாரியிலும், அதுவும் இல்லாத போது நடையிலும் திருநெல்வேலி ஜில்லா முழுதும் சுற்றி அலைந்தார்.

ஆயிரக்கணக்கான ஜனங்களுக்குச் சமைக்கப் பாத்திரங்களும், பரிமாற இலைகளும், தண்ணீர் குடிக்கக் குவளைகளும் எங்கிருந்துதான் கொண்டு வந்தாரோ தெரியாது.

பல ஊர்களிலிருந்தும் வந்திருந்த ஐந்நூறு தொண்டர்களுக்கு வேலையைப் பகிர்ந்து கொடுத்து வேலை வாங்கினார்.



பாரதி மண்டபத்தில் தூங்கா விளக்கு ஒளி வீசும் பொருட்டுத் திருவாவடுதுறை ஆதீனத்தார் அனுப்பிய வெள்ளிக் குத்து விளக்குகள்.

இதெல்லாம் ஒருபுறமிருக்கட்டும். 12-ந் தேதி இரவு 12 மணிக்கு ஸ்ரீ தண்டபாணி தேசிகரின் கச்சேரி முடிந்தது. சபை கலைவதற்கு அப்புறம் அரை மணியாயிற்று. பந்தலிலேயே துணியை விரித்துப் படுத்தவர்களை நல்ல வார்த்தை சொல்லிக் கிளப்புவதற்கு மேலும் அரை மணியாயிற்று.

இதற்குள் தொண்டர்கள் பெரும்பாலோர் தூங்கப் போய்விட்டார்கள்.

பந்தலில் ஸ்ரீ சோமயாஜுலு, ஸ்ரீ கந்தசாமி செட்டியார், ஸ்ரீ சா. கணேசன், ஸ்ரீ கே. பி. எஸ். நாராயணன் இவர்களுடன் ஸ்ரீ சதாசிவமும் நானுந்தான் பாக்கி இருந்தோம்.

பந்தலைப் பார்ப்பதற்குப் பயங்கரமாயிருந்தது. செய்திருந்த அலங்காரங்கள் ஒன்றையும் காணவில்லை. எங்கே பார்த்தாலும் குப்பை கூளங்களுடன் அலங்கோலமாயிருந்தது.

"காலையில் திறப்பு விழா இந்தப் பந்தலிலேதானா நடக்கப் போகிறது?" என்று ஸ்ரீ சோமயாஜுலுவைக் கேட்டேன்.

"நடப்பதற் கென்ன தடை? இன்னும் மூன்று மணி நேரம் இருக்கிறதே!" என்று சோமயாஜுலு சொன்னார்.

"சரி; வேலை செய்ய ஆரம்பியுங்கள். நானும் இருக்கிறேன்" என்றேன்.

"என்னென்ன செய்ய வேண்டும்? எழுதிக் கொடுத்து விடுங்கள்!" என்றார் சோமயாஜுலு.

பன்னிரண்டு காரியங்களுக்கு ஜாபிதா போட்டுக் கொடுத்தேன். அவையெல்லாம் நடக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. "நடந்தவரையில் நடக்கட்டும்!" என்றுதான் எழுதினேன்.

"சரி, இனி நீங்கள் ஜாகைக்குப் போகலாம்; காரியங்களை முடிக்க நாங்கள் ஆயிற்று!" என்றார்.

"அதெல்லாம் போக முடியாது" என்று நான் சொன்னேன்.

"இனிமேல் கண் விழித்தால் உங்களால் காலையில் விழாவுக்கு வரமுடியாது. என்னை நம்பி விட்டு விட்டுப் போங்கள்.

காலையில் ஐந்து மணிக்கு வந்து எழுப்புகிறேன்!'' என்றார்.

கடவுள் பேரில் பாரத்தைப் போட்டு விட்டு ஜாகைக்குச் சென்றேன்.

ஸ்ரீ சோமயாஜுலு கொடுத்த வாக்குப்படியே காலை ஐந்து மணிக்கு வந்தார். "எல்லா வேலையும் முடிந்து விட்டது! பந்தலுக்கு வந்து பாருங்கள்!'' என்றார்.

போய்ப் பார்த்தால், கண்களையே நம்ப முடியவில்லை. தழைகளாலும், குழைகளாலும், மலர் மாலைகளாலும், பச்சைத் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டுத் திருவிழாப் பந்தல் தேவேந்திரனுடைய கொலு மண்டபத்தைப்போல் விளங்கிற்று!

எழுதிக் கொடுத்த காரியங்கள் எல்லாம் முடிந்திருந்தன. மண்டபத்துக்குள்ளே பாரதியார் படங்களும் புத்தகங்களும் வைத்து அலங்கரிக்கப் பட்டிருந்தன. மண்டபத் திறப்பின்போது முழங்குவதற்காகச் சங்கங்கள், பேரிகைகள், மத்தளங்கள், மேளங்கள் எல்லாம் தயாராயிருந்தன. விதவிதமான வர்ண மலர் மாலைகளோடு பூமழை பொழிவதற்கான உதிரிப் புஷ்பங்கள் கூடை கூடையாய் வைத்திருந்தது.

தூய கதராடை தரித்த தொண்டர்கள் சாலையின் இருபுறத்திலும், மண்டப வாசலின் வழியிலும் அணிவகுத்து நின்றார்கள்.

எட்டுத் திசைகளும் அதிரும்படியாக வேட்டுக்கள் தீர்ந்து கொண்டிருந்தன!

இவ்வளவு காரியங்களையும் இரவு இரண்டு மணிக்கு மேல் காலை ஐந்து மணிக்குள்ளே எப்படிச் செய்து முடித்தார்கள் என்று நினைக்க நினைக்க அதிசயமாயிருந்தது.

ஸ்ரீரங்கத்தில் பூதங்கள் வந்து ஒரே நாள் இரவில் கோபுரம் கட்டி விட்டுப் போனதாகச் சொல்வார்களே, அந்தமாதிரியல்லவா இருக்கிறது?

ஸ்ரீ சோமயாஜுலு பாரதி விழாவிலே செய்த கைங்கரியத்துக்காக அவருக்கு ஒரு உருவச் சிலை செய்து வைக்க வேண்டும். அதற்கு இப்போது வசதியில்லாதபடியால் அவரை அட்டைப் படத்தில் போட்டுத் திருப்தி யடைகிறேன்.

* * *

ஸ்ரீ சோமயாஜுலுவின் மகத்தான தொண்டில் அவருக்குப் பக்கத் துணையாக இருந்து உதவி செய்தவர்களில் காரைக்குடி ஸ்ரீ சா. கணேசனையும், கோவில்பட்டி ஸ்ரீ சண்முகம் பிள்ளையையும் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். ஸ்ரீ சா. கணேசன் பந்தல் ஏற்பாடுகளின் பொறுப்பை வகித்து, 12மணி இரவுக்குள் தம் குரலை அடியோடு பறிகொடுத்து, மூர்ச்சை யடைந்து விழுந்து விட்டார். ஸ்ரீ சண்முகம் பிள்ளை ஒரு நிமிஷம் இருந்த இடத்தில் மறு நிமிஷம் இராமல் சுற்றிச் சுழன்று வந்தார்.

சங்கரன்கோவில் மிட்டாதார் ஸ்ரீ மாணிக்கம் செட்டியார், ஸ்ரீ கருப்பய்யா பிள்ளை, ஸ்ரீ முத்துச்சாமிச் செட்டியார், புளியங்குடி ஸ்ரீ உலகமுத்துச் செட்டியார் ஆகியவர்களும், இவர்களுடன் வந்திருந்த நண்பர்களும் சமையல் - சாப்பாடு பொறுப்பை வகித்து ஒப்பற்ற தொண்டு செய்தார்கள்.

இன்னும் மேற்படி ஊர்களைச் சேர்ந்த ஸ்ரீ பாலசுப்பிரமண்ய செட்டியார், ஸ்ரீ காசி நாயக்கர், ஸ்ரீ சுவாமிநாதன், ஸ்ரீ தங்கம் பிள்ளை ஆகியவர்கள் வெளியூர்களிலிருந்து வந்தவர்களைக் கவனித்து ஜாகை கொடுத்து மிகச் சிறந்த உதவிபுரிந்தார்கள்.

இவர்களுக்கெல்லாம் என் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன்.

அருப்புக்கோட்டை, வாசுதேவநல்லூர், சிவகிரி, புளியங்குடி, சங்கரன்கோவில், செந்தாரப்பட்டி, சிறுவயல் இந்த ஊர்களிலிருந்து வந்த தொண்டர்களும், திருநெல்வேலி ஹிந்து காலேஜ் தொண்டர்களும், திருவிதாங்கூர் தமிழர் காங்கிரஸ் தொண்டர்களும் தங்களுக்கு முன்பின் தெரியாத புது இடத்தில் பல அசௌகரியங்களுக்கிடையே அற்புதமான தொண்டு செய்தார்கள். பாரதியாரின் அருளால் அவர்களுக்கு எல்லா நன்மைகளும் உண்டாகப் பிரார்த்திக்கிறேன்.

கரிசல் பூமியில் கால்கள் சேற்றில் பதியச் சமையல் இடத்தில் தொண்டு செய்த ஸ்ரீ ராமஸ்வாமி ஐயர் ஸ்ரீ சங்கரய்யர் முதலியவர்களுக்கும், திருவாங்கூர் சங்கரன் கோவில் தொண்டர்களுக்கும் இறைவன் எல்லா நலங்களையும் அருள்வானாக. என்றென்றைக்கும் அவர்களுக்கு உணவுக் கவலை தோன்றாதிருக்குமாக.

ஒரு தடவை கூட 'மின்சார விளக்கு அணைந்து குழப்பம் ஏற்படாவண்ணம் சர்வ ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்ட மின்சார இலாகா உத்தியோகஸ்தர்கள்—



சிப்பந்திகளின் வீடுகளில் என்றென்றைக்கும் அறிவின் ஒளி பிரகாசிக்கட்டும்.

ஒரு லட்சம் ஜனங்கள் கூடிக் கலந்திருந்தும் ஓரிடத்தில் துர்நாற்றம் வராமலும், ஒருவருக்கு ஒரு நோய் வராமலும் பாதுகாத்த சுகாதார இலாகா உத்தியோகஸ்தர்களின் வீடுகளில் என்றைக்கும் சுகம் குடிகொண்டு விளங்கட்டும்.

எட்டயபுரம் விழாவுக்குச் செய்திருந்த போக்குவரவு வசதிகளைப் பாராட்டாதவர்கள் யாரும் இல்லை. நாலு நிமிஷத்துக்கு ஒரு பஸ் பறந்துகொண்டிருந்த விந்தையைக் கண்டு வியக்காதவர்களும் இல்லை. இதை யெல்லாம் சாத்தியமாகச் செய்த மதுரை டி. வி. எஸ். கம்பெனி, கோவில்பட்டி கோபாலன் மோட்டார் சர்வீஸ் கம்பெனி, லயன் கம்பெனி இவற்றின் சொந்தக்காரர்களை எவ்வளவு பாராட்டினாலும் அது போதாது என்றே தோன்றும். அவ்வளவு மகத்தான உதவி அவர்கள் செய்திருக்கிறார்கள்.

திருச்சினாப்பள்ளி அஸோஸியேடட் ரேடியோ ஏஜென்ஸிஸ், சாத்தூர் ரேடியோ ஸேல்ஸ் அண்டு சர்வீஸ் ஆகிய இரு கம்பெனியாரும் 11வ. யன்றே ஒலி பெருக்கிகள் கொண்டு வந்து வைத்து, பரீட்சை பார்த்து, ஒரு தடவையாவது "ஒலி பெருக்கி வேலை செய்யவில்லை'' என்ற பெயர் ஏற்படாமல் தொண்டு செய்தார்கள். இவர்களுக்கு ஒரு லட்சம் தமிழ் மக்களின் சார்பாக நன்றி செலுத்துகிறேன்.

எட்டயபுரத்தில் நிகழ்ந்த சம்பவங்கள், நடந்த கச்சேரிகள், பிரசங்கங்கள் எல்லாவற்றையும் நேரில் பார்த்துக் கேட்பது போலப் பல லட்சம் தமிழர்கள் இலங்கை முதல் கல்கத்தா — காசி நகர் வரையில் பார்த்துக் கேட்டு அநுபவிக்கும்படி செய்த திருச்சி ரேடியோ நிலையத்தாருக்கு மனமார்ந்த வந்தனம். எட்டயபுர நிகழ்ச்சிகளைக் கேட்டு அனுபவித்தது பற்றிக் கல்கத்தாவிலிருந்தும் காசியிலிருந்தும் பரவசமாகக் கடிதங்கள் வந்திருக்கின்றன.

பாரதி மண்டபத் திருவிழாவுக்கு இரண்டு நாள் முன்னதாகவே வந்திருந்து, பாரதியார் பிறந்த வீட்டில் கொடி யேற்றி வைத்து, பல விதங்களிலும் ஒத்துழைத்த தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் ஸ்ரீ எம். பி. பெரியசாமியை வாழ்த்துகிறேன். மற்றும் ராய்ட்டர் நிருபருக்கும், சென்னைத் தினப் பத்திரிகை நிருபர்களுக்கும், பாரதி மண்டப விழாவைத் தங்கள் சொந்த விழாவாகக் கருதி ஒத்துழைத்த ஆசிரியர்களுக்கும் பத்திரிகையாளருக்கும் பன்முறை வந்தனம் கூறுகிறேன். அவர்களுக்கு நேர்ந்திருக்கக்கூடிய அசௌகரியங்களை உணர்ந்து மன்னிப்புக் கோருகிறேன்.

விழாவில் இன்னிசைக் கச்சேரி செய்த வித்வான்களுக்கும் பக்க வாத்தியக்காரர்களுக்கும் நாதஸ்வர வித்வான்களுக்கும் வரவேற்புக் கமிட்டியாரின் சார்பாக நன்றி கூறி வாழ்த்துகிறேன்.

* * *

எவ்வளவோ முக்கியமான இராஜாங்கக் காரியங்களை யெல்லாம் நிறுத்தி வைத்து விட்டு எட்டயபுரம் வந்து விழாவை நடத்திக் கொடுத்த ராஜாஜிக்கு நன்றி கூற நான் உத்தேசிக்கவில்லை; அது அதிகப் பிரசங்கித்தனமாகும்.

எட்டயபுரம் வாசிகளுக்கும் எட்டயபுரம் பாரதி மன்றத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இப்போது நான் நன்றி செலுத்துவதாக உத்தேசம் இல்லை. என்னால் சுமக்க முடியாத பெரிய பாரத்தை என்மீது சுமத்தியவர்கள் அவர்களே யல்லவா? இனியும் பாரதி மண்டபத்தில் பாரதியாரின் இலட்சியங்களுக்கு உகந்த நிரந்தர ஸ்தாபனம் ஏற்பட்டு நடை பெறுவது, எட்டயபுரம் வாசிகளும் எட்டயபுரம் பாரதி மன்றத்தாரும் அளிக்கும் ஒத்துழைப்பையே பொறுத்திருக்கிறது. எனவே, இப்போது அவர்களுக்கு அவசரப்பட்டு வந்தனம் அளிப்பது அர்த்தமற்ற செயலாகும். பிற்பாடு பல சந்தர்ப்பங்கள் அதற்கு ஏற்படும்.

தமிழ் நாட்டின் நாலா பக்கங்களிலிருந்தும், இலங்கையிலிருந்தும், கல்கத்தாவிலிருந்தும், பம்பாயிலிருந்தும் விஜயம் செய்து பாரதி மண்டபத் திறப்பு விழாவைச் சிறப்பித்த தமிழறிஞர்கள், தமிழன்பர்கள், மகாஜனங்கள் எல்லாருக்கும் மனமார்ந்த நன்றி கூறுகிறேன்.

மகாகவியின் குடும்பத்தைச் சேர்ந்த அவருடைய மனைவியார் ஸ்ரீமதி செல்லம்மாள், புதல்விமார் ஸ்ரீமதி தங்கம்மாள், ஸ்ரீமதி சகுந்தலா, இவர்களுடைய செல்வக் குழந்தைகள், பாரதியாரின் சகோதரர் ஸ்ரீ விசுவநாதய்யர் ஆகியவர்களின் விஜயத்தினால் மண்டபத் திறப்பு விழா மிகச் சிறப்படைந்தது. இவர்களுக்கெல்லாம் தலை வணங்கி நன்றி செலுத்துகிறேன்.

இந்த விரிவான நன்றியுரையைப் பொறுமையுடன் படித்ததற்காக நேயர்களுக்கும் நன்றி செலுத்துகிறேன். ஓம் சுபம்.

# எட்டயபுரம் விஜயம்

● எட்டயபுரத்தில் அக்டோபர் 12, 13உகளில் நடந்த பாரதி மண்டபத் திறப்பு விழாவுக்கு விஜயம் செய்த பிரமுகர்கள்.

ஸ்ரீ ராஜாஜி, கவிஞர் ராமலிங்கம் பிள்ளை, ஸ்ரீ ஓ. பி. ராமசாமி ரெட்டியார், ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார், டாக்டர் பி. சுப்பராயன், டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், ஸ்ரீ டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார், ஸ்ரீ டேனியல் தாமஸ், ஸ்ரீ எம். பக்தவத்சலம், ஸ்ரீ ஜே. சிவசண்முகம் பிள்ளை, ஸ்ரீ காமராஜ நாடார், ஸ்ரீ சி. பெருமாள்சாமி ரெட்டியார் எம். எல். சி., ஸ்ரீ ஏ. வைத்தியநாத அய்யர் எம். எல். ஏ., குமாரராஜா முத்தையா செட்டியார், ஸ்ரீ வி. நாடிமுத்துப் பிள்ளை, பேராசிரியர் ஸ்ரீ சோமசுந்தர பாரதியார், ஸ்ரீ கே. சுப்பிரமண்யம் (சுப்ரி) எம். எல். ஏ., சர்தார் வேதரத்தினம் எம். எல். ஏ., ஸ்ரீ டபிள்யூ. எஸ். சீனிவாச ராவ் எம். எல். ஏ., ஸ்ரீமதி லக்ஷ்மி சங்கரய்யர் எம். எல். ஏ., ஸ்ரீமதி லக்ஷ்மி பாரதி எம். எல். ஏ., ஸ்ரீ ஏ. சுப்ரமண்யம் எம். எல். ஏ., அம்மாப்பேட்டை வெங்கட்ராமய்யர் எம். எல். ஏ., ஸ்ரீ எல். எஸ். கரையாளர் எம். எல். ஏ., ஸ்ரீ துரைராஜ பாண்டியன் எம். எல். ஏ., ஸ்ரீ வி. சி. பழனிசாமிக் கவுண்டர் எம். எல். ஏ., ஸ்ரீ பரமானந்த ராயர் எம். எல். ஏ., ஸ்ரீ என். எம். ஆர். சுப்பராமன் எம். எல். ஏ., ஸ்ரீ கே. எஸ். பெரியசாமி, மதுரை மௌலானா சாகிப், திண்டுக்கல் ஜனாப் அப்துல் சத்தார், ஸ்ரீ கருமுத்து தியாகராஜ செட்டியார், ஸ்ரீ எல். கிருஷ்ணசாமி பாரதி, ஸ்ரீ வேலூர் குப்புசாமி முதலியார், ஸ்ரீ ராணிப்பேட்டை கல்யாணராம அய்யர், ஸ்ரீ ஆக்கூர் அனந்தாச்சாரியார், ஸ்ரீ சிவஞான கிராமணி, ஸ்ரீ ஆர். சிதம்பர பாரதி, ஸ்ரீ ஏ. வி. மெய்யப்பச் செட்டியார், ஸ்ரீ ட்ரோஜன் அண்ணாமலைச் செட்டியார், ஸ்ரீ ஜீவானந்தம், ஸ்ரீ பெரியசாமித் தூரன், ஸ்ரீ எம். சி. வீரபாகு, ஸ்ரீ ஏ. பி. சி. வீரபாகு, ஸ்ரீ ஏ. எல். ஏ. ஆர். சோமநாதஞ் செட்டியார், நவாப் ராஜமாணிக்கம், ஸ்ரீ டி. கே. ஷண்முகம், ஸ்ரீ எம். எம். தண்டபாணி தேசிகர், ஸ்ரீ சீதாபதி (கல்கத்தா), ஸ்ரீ வி. டி. சாமி (கல்கத்தா), ஸ்ரீ எச். சிவராமகிருஷ்ணன் (பம்பாய்), ஸ்ரீ ஆவடையப்பப் பிள்ளை, ஸ்ரீ பி. எஸ். சின்ன வெங்கடராஜா, ஸ்ரீ ஏ. கே. டி. பலராம் ராஜா (ராஜபாளையம்), ஸ்ரீ வி. எஸ். மணி அய்யர் (பாரதி ஞாபகார்த்த கமிட்டி, பாண்டிச்சேரி), ஸ்ரீ கே. பால சுப்ரமணிய அய்யர் (சென்னை), ஸ்ரீ எம். சுப்பராயர் (சென்னை), ஸ்ரீ ராமசாமிதாஸ் (கோவில்பட்டி), ஸ்ரீமதி ஜானம்மாள், ஸ்ரீமதி கோதைநாயகி அம்மாள், ஸ்ரீமதி ரகுராஜ பாரதி, ஸ்ரீ நாரண துரைக்கண்ணன், ஸ்ரீ சின்ன அண்ணாமலை, ஷெரிப் ஸ்ரீ ராமசாமி நாயுடு, ஸ்ரீ சா. கணேசன், ஸ்ரீ எம். ஆர். மேகநாதன், ஸ்ரீ மீனாட்சிசுந்தரம், டாக்டர் மகாலிங்கம் (கும்பகோணம்), ஸ்ரீ கே. சடகோபன், ஸ்ரீ வி. துரைசாமி நாடார் (தூத்துக்குடி), ஸ்ரீ சுந்தாவேல் நாடார் (தூத்துக்குடி) முதலிய இன்னும் பலர்.

● பாரதி மண்டபத் திறப்பு விழாவுக்கு வாழ்த்துச் செய்திகளும் வாழ்த்துப் பாடல்களும் அனுப்பியவர்கள் :—

கவியரசி ஸ்ரீமதி சரோஜினி தேவியார்; ஸ்ரீ ஆர். கே. சண்முகம் செட்டியார்; டாக்டர் ஏ. லக்ஷ்மணஸ்வாமி முதலியார்; ஸ்ரீமதி அம்முசுவாமிநாதன், சென்னை; ஸ்ரீ ராமலிங்கம், பம்பாய்; ஸ்ரீ சி. எஸ். ரங்கசாமி கல்கத்தா; ஸ்ரீ முனுசாமிப் பிள்ளை, டர்பன், தென்னாப்பிரிக்கா; ஸ்ரீ கனகரத்தினம், கொழும்பு; ஸ்ரீ பரலி சு. நெல்லையப்பர், சென்னை; ஸ்டாலின் கே. ஸ்ரீநிவாஸன், பம்பாய்; ஆசிரியர் "ஈழகேசரி", யாழ்ப்பாணம், வெஸ்டர்ன் ஏஜென்ஸீஸ், கொழும்பு; ஷண்முகானந்தா பைன் ஆர்ட்ஸ், பம்பாய்; ஸ்ரீ கே. சுந்தரேசன், பம்பாய்; ஸ்ரீ கந்தசாமி, பம்பாய்; தமிழ்ச் சங்கம், பம்பாய்; ஸ்ரீ ராமகிருஷ்ண ராஜு, மேல் சபைத் தலைவர், சென்னை; ஸ்ரீ கே. வெங்கடசாமி நாயடு, சென்னை; ஸ்ரீ அண்ணாமலைப் பிள்ளை, திருவண்ணாமலை; ஸ்ரீ எம். சத்திய நாராயணா, ஹிந்தி பிரசார சபை, சென்னை; ஸ்ரீ வி. நாகையா, சென்னை; ஸ்ரீ நரேந்திர சர்மா, பம்பாய்; ஸ்ரீ டி. ஆர். அருணாசலம், காரைக்குடி; ஸ்ரீ முகுந்தராஜ அய்யங்கார், தேவகோட்டை; ஸ்ரீ வே. முத்துசாமி ஐயர் எம்.ஏ.எல்.டி., ரங்கநாதபுரம்; ஸ்ரீ பி. துரைராஜ் நாடார், விருதுநகர்; கவிக்கன்னி நிலையம், தக்கலை; ஸ்ரீ சிரோமணி ரங்கநாதாச்சாரி, தஞ்சை; ஸ்ரீ சண்முக முதலியார், குடியாத்தம்; ஸ்ரீ ராமலிங்கராஜ், ராமநாதபுரம்; திருவள்ளுவர் தமிழ்க் கழகம், திருச்சி; ஸ்ரீ தி. விசுவநாதன், கடவாசல்; இன்னும் பல அன்பர்கள்.











மண்டபத்துக்குள்ளே அலங்கரித்துவைத்திருந்த புத்தகசாலையை ராஜாஜி பார்வையிடுகிறார். புத்தகசாலையை ராஜாஜிக்குக் காட்டுகிறவர் காரைக்குடி ஸ்ரீ சா. கணேசன். கையில் தடியுடன் நிற்பவர் மேற்கு வங்காளக் கவர்னரின் மெய்காப்பாளர் ஸ்ரீ சிங்காரவேலு.



மண்டபத் திறப்புக்குப் பிறகு தலைவர்கள் திருவிழா மேடைக்கு வந்து சேர்ந்தார்கள். ஜன சமுத்திரத்தின் ஒரு மூலையில் கிளம்பிய அலைமோதலைப் பார்த்துவிட்டு ராஜாஜி ''அந்த மூலையில் நிற்பவர்கள் தயவுசெய்து உட்காருங்கள்'' என்று கேட்டுக் கொள்கிறார்.

மண்டபத் திறப்பின்போது கல்கி ஆசிரியரின் பேனாவும், அத்துடன் நிகழ்ச்சித் திட்டமும் காணாமற் போய்விட்டன. கல்கி ஆசிரியர் அவசரமாக நிகழ்ச்சித் திட்டம் எழுதுகிறார். ராஜாஜி கோபமாகப் பார்க்கிறார்.



ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி ''பொழுது புலர்ந்தது'', ''தெய்வத் தமிழ் நாட்டினிலே'', ''யாமறிந்த மொழிகளிலே'' என்னும் பாடல்களைப் பாடித் திருவிழாவை ஆரம்பித்து வைத்தார்.

சொல்லைக் கொண்டு கவிஞர்கள் புனையும் சுந்தர காவியத்தைப்போல் கல்லைக் கொண்டு புனைந்த அழகிய மண்டபத்துக்குப் பிளான் போட்டுக் கொடுத்து உதவிய கட்டிட நிபுணர் ஸ்ரீ சித்தலேயும் திருவிழாவுக்கு வந்திருந்தார். திருவிழா நிகழ்ச்சிகள் அவருக்குப் பிரமிப்பை அளித்தன.



ராஜாஜியின் தலைமைப் பிரசங்கம் முடிந்த பிறகு, சபாநாயகர் ஸ்ரீ ஜே. சிவஷண்முகம் பிள்ளையும், உணவு மந்திரி டாக்டர் ராஜனும், பேராசிரியர் ஸ்ரீ சோமசுந்தர பாரதியாரும் பேசினார்கள்.



பாரதி விழா மேடை எல்லாக் கட்சியாருக்கும் எல்லாச் சமூகத்தாருக்கும் இடமளித்தது. இதோ, கம்யூனிஸ்ட் தோழர் ஸ்ரீ ஜீவானந்தம் சக்கைப் போடு போடுகிறார்!

பாரதியாரின் அருமைப் புதல்வி ஸ்ரீமதி சகுந்தலா தேவியார் தமது மகிழ்ச்சியை ஓர் அகவற்பாவினால் தெரிவித்துக் கொள்கிறார்.

மதுவிலக்கு மந்திரி ஸ்ரீ டேனியல் தாமஸ் அழகிய தமிழில் மகா கவி பாரதியின் பெருமையை எக்களிப்புடன் எடுத்துச் சொல்கிறார்.



பழம்பெரும் தேச பக்தரான மதுரை மௌலானா சாகிப் அவர்களும், நாமக்கல் கவிஞரும், எழுத்தாளர் சங்கத் தலைவர் ஸ்ரீ பெரியசாமித் தூரனும், தமிழ்முரசு கொட்டும் ஸ்ரீ சிவஞான கிராமணியாரும் பேசி, ராகு காலமும் சென்ற பிறகு பிரதம மந்திரி கனம் ஓமந்தூர் ரெட்டியார் மேடை மீது இதுகாறும் மூடி வைத்திருந்த பாரதியார் உருவச் சிலையைத் திறந்து வைத்தார். அப்போது மகாஜனங்கள் செய்த ஆரவாரத்தினால் பந்தலுக்கே ஆபத்து வரும் போலத் தோன்றியது!



பூமாலைத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட பாரதி மண்டபத்துப் பந்தலில் பாரதியாரின் பாமாலைகளை ஸ்ரீ எஸ். கிருஷ்ணசாமி பாரதி உணர்ச்சியுடன் எடுத்துரைத்தார்.



நாடகக் கலைஞர் ஸ்ரீ டி. கே. ஷண்முகம் உணர்ச்சியுடன் கம்பீரமாகப் பாடிய "ஜய பேரிகை கொட்டடா!" என்னும் பாரதியார் பாடலுடன் திருவிழா முடிவுற்றது.

★

திண்டுக்கல் தேசத் தொண்டரும் தியாகியும் மாகாண காங்கிரஸ் அங்கத்தினருமான ஸ்ரீ முனிசாமி தமக்குத் திண்டுக்கல் மகாஜனங்கள் அளித்த பணமுடிப்பு ரூ. 611—1—) ஐப் பாரதி மண்டப கைங்கரியத்துக்குச் சமர்ப்பித்தார்.



பாரதி மண்டபத் திறப்பு விழா மகத்தான வெற்றியுடன் இனிது முடிந்து தலைவர்கள் மீண்டும் சென்னை வந்து சேர்ந்தார்கள். எழும்பூர் ஸ்டேஷனில் ராஜாஜியும் குமாரராஜா முத்தையா செட்டியாரும் பரஸ்பரம் விடைபெற்றுக் கொள்கிறார்கள்.

●

வந்த காரியம் சுபமாக முடிந்து இணையில்லாத மன மகிழ்ச்சியுடன் ராஜாஜி விமானத்தில் ஏறினார். விமானப் படி மீது ஒருகணம் நின்ற ராஜாஜிக்குக் "கல்கி" மானேஜர் ஸ்ரீ சதாசிவம் வரவேற்புக் கமிட்டியின் சார்பாக மாலையிட்டு "மாலையைக் கல்கத்தாவுக்குக் கொண்டு போகவேண்டும்!" என்று கேட்டுக் கொண்டார். விழா முடிந்தது! விமானம் கிளம்பிற்று! மங்களம்!




ஜீவாதாரமான போக்குவரத்து சாதனங்களுக்கு




டன்லப் ஜயண்ட்கள்

DX 305 TM


198269
சென்னை-600 008






போட்டிக் கதை—14.




அப்பா! பரீக்ஷை எல்லாம் ஒருவிதமாக முடிவடைந்தது. இனிமேல் ராத்திரியெல்லாம் தூங்கி வழிந்துகொண்டு, "கத்தரிக்காய் எந்த வம்சத்தைச் சேர்ந்தது, ஷேக்ஸ்பியர் 'ஹாம்லெட்' எழுதும்போது என்ன மன நிலையில் இருந்தான், ஷெல்லியின் கவிதையில் ஒளிந்து கொண்டிருக்கும் அழகு என்ன?" என்பது போன்ற விஷயங்களை 'நெட்டுருப்' பண்ண வேண்டியதில்லை!

ஆஹா! பரீக்ஷைக்கு மறுநாள் மாணவ மாணவிகள் அடையும் குதூகலத்தைத்தான் எதற்கு ஒப்பிடுவது! ஹாஸ்டலில் எங்கு பார்த்தாலும் என் சிநேகிதைகள் அரட்டை அடித்துக் கொண்டு ஆடிப்பாடி நடமாடிக் கொண்டிருந்தனர். நானும் அவர்களுடன் சேர்ந்து கொண்டேன். "தபால்!" என்ற சத்தம் கேட்டு எல்லோரும் துள்ளி ஓடினோம். எனக்கும் ஊரிலிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. கவரை அவசரமாகப் பிரித்துப் படித்தேன். ஐயோ! இதென்ன பேரிடி! என் அருமை அக்கா லக்ஷ்மி என்னை விட்டுவிட்டுப் போய் விட்டாளாமே! அந்தக் கிராதக அத்திம்பேர் என் அருமை அக்காவைக் கடைசியில் கொன்றே விட்டாரா?

* * *

என் தந்தை தஞ்சாவூரில் ஒரு பெரிய மிராசுதார். சந்தான சம்பத்தும் லக்ஷ்மி கடாக்ஷமும் பூர்ணமாக அவருக்கு இருந்தன. நான் நாலு வயதுக் குழந்தையாக இருந்தபோதே என் தாயார் எங்களையெல்லாம் தவிக்க விட்டுவிட்டு மறு உலகம் சென்றுவிட்டாள். தந்தையே எங்களுக்குத் தாயுமாக இருந்து வந்தார்.

நானும் என் அக்காவும் இணைபிரியா ஜோடிகளாகவே இருந்தோம். அக்கா 'ஸ்கூல் பைனல்' பாஸ் பண்ணிவிட்டாள். அப்பா ஜாதகக் கட்டுகளைப் பிரிக்க ஆரம்பித்தார். பெரிய பெரிய இடங்களாகவே பார்த்துக் கொண்டு போனார். "அக்காவை விட்டுப் பிரிய வேண்டி வந்து விடுமோ!" என்று நினைத்தவுடன் என் நெஞ்சை அடைத்துக் கொண்டது. என் அண்ணன்மார் இருவரும் "உன் அக்கா புக்ககத்துக்குப் போகும் போது நீயும் கூடவே போய் விடு!" என்று, கேலி செய்தார்கள்.

திடீரென்று ஒருநாள் அப்பாவும் நானும் பேசிக்கொண்டிருந்த பொழுது அக்கா வெகு தயக்கத்துடன் வந்து, "அப்பா! நான் கண்ணனைத்தான் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிறேன்!" என்று ஓர் அணுகுண்டைத் தூக்கிப் போட்டாள்!

கண்ணன், என் சின்ன அண்ணாவாகிய பாபுவின் சிநேகிதன் என்ற முறையில் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருந்தான். பி. ஏ. பரீக்ஷையை மூன்றாவது தடவையாக முற்றுகை இட்டிருந்தான். கிராமத்தில் பிதிரார்ஜிதமாக ஏதோ சொற்ப நிலமும் ஓர் இடிந்த வீடும் இருப்பதாகக் கேள்வி.

அக்கா சொன்னதைக் கேட்டதும் அப்பா இரைந்தார். நயமாகச் சொல்லிப் பார்த்தார். அம்மாவின் ஞாபகத்தை வைத்துக்கொண்டாவது தன் சொற்படி கேட்கும்படி கெஞ்சினார். நான் ஒன்றும் புரியாமல் அக்காவைக் கட்டிக் கொண்டு வெகு நேரம் வரை அழுதேன்.

"அந்த அயோக்கியனைத் தொலைத்து விடுகிறேன். சிநேகிதன் என்று அந்தப் பிச்சைக்காரப் பயலைக் கௌரவப்படுத்தினால் அவன் இப்படியா துரோகம் பண்ணினான்? இனிமேல் அவன் இந்த வீட்டில் கால் எடுத்து வைக்கிறானா, பார்க்கலாம்!" என்று சின்ன அண்ணா இரைந்தான்.

மன்னிகள் நல்ல வார்த்தைகள் சொல்லி புத்தி புகட்டப் பார்த்தார்கள். அக்கா அசைந்து கொடுக்கவில்லை. உண்ணா விரதம், மௌன விரதம் முதலிய ஆயுதங்களை உபயோகிக்க ஆரம்பித்தாள்!

என்ன இருந்தாலும் பெற்ற மனம் பித்து அல்லவா? அப்பாவால் தன் செல்வக் குழந்தையின் அவஸ்தையைச் சகிக்க முடியவில்லை. என் தமையன்களின் அட்டகாசத்தைப் பொருட்படுத்தாமல் ஒரு சுப முகூர்த்தத்தில் கண்ணனுக்கே என் அக்காவை விமரிசையாகக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தார். அக்கா பேரில் 10,000 ரூபாய் பாங்கியில் போட்டார். பலத்த சிபார்சு பண்ணி அத்திம்பேருக்கு ஒரு பாங்கியில் 150 ரூபாய் சம்பளத்தில் வேலையும் செய்து கொடுத்தார். எங்கள் வீட்டுக்கு அருகிலேயே ஒரு சிறிய பங்களாவில் சகல சௌகரியங்களுடன் புதுத் தம்பதிகளைக் குடித்தனமும் வைத்தார்.

ஆனால், என் தமையன்கள் மட்டும் சமயம் கிடைக்கும் போதெல்லாம் அத்திம்பேரை நோக்கி, "எங்கள் அப்பாதானே உனக்குச் சோற்றுக்கு வழி தேட வேண்டியிருந்தது!" என்று சொல்லத் தயங்கவில்லை.

அத்திம்பேர் ஏழையானாலும் வெகு ரோசக்காரர்; அத்துடன் பயந்து போகும் சுபாவமும் இல்லாதவர். பதிலுக்குப் பதில் நன்றாகக் கொடுப்பார். நாளடைவில், அவர் தம்முடைய மைத்துனன்கள் பேரிலுள்ள கோபத்தை வைத்துக் கொண்டு அக்காவைத் துன்புறுத்த ஆரம்பித்தார். கல்யாணம் ஆன ஆறு மாதத்துக்குள்ளேயே அக்கா சதா கண்ணீரும் கம்பலையுமாக இருக்க வேண்டியதாக நேர்ந்தது.

அக்கா பேரில் பாங்கியில் போட்டிருந்த பணம் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து கொண்டு வருவதாகக் கேள்விப்பட்டு, அப்பா மெதுவாக அக்காவைக் கேட்டுப் பார்த்தார். அக்கா பதில் சொல்ல இஷ்டப்படவில்லை. தமையன்கள் அத்திம்பேரை அதட்டினார்கள். அதன் பலனாக மறுநாள் பாங்கியில் போட்டிருந்த பணம் அத்தனையும் எடுத்துக் கொண்டு, பாங்க் வேலையையும் ராஜீநாமா பண்ணி விட்டு அத்திம்பேர் அன்று ராத்திரியே எங்கோ மறைந்து விட்டார்!

இந்தச் சமயத்தில் அக்கா மூன்று மாதக் கர்ப்பிணி. அவளை எப்படிச் சமாதானப்படுத்துவது என்று தெரியாமல் நாங்கள் விழித்துக் கொண்டிருந்த சமயத்தில், "சனி தொலைந்தான்! நீபாட்டுக்குக் கவலையற்று இரு!" என்றான் சின்ன அண்ணா.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு அத்திம்பேரிடமிருந்து அக்காவுக்கு ஒரு கடிதம் வந்தது. அப்பொழுதுதான் அத்திம்பேர் தன் கிராமத்தில் இருக்கிறார் என்று தெரிந்தது. "சீமந்தம் பண்ண வேண்டும், உடனே புறப்பட்டு வா!" என்று அப்பா எழுதிய கடிதத்துக்குப் பதில் இல்லை. அவர் மனம் உடைந்து போனார்.

கடைசியில் தங்க விக்கிரகம் போன்ற ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள் அக்கா. பிரசவித்து இரண்டு மாதமானதுமே தன்னைக் கிராமத்தில் கொண்டு போய் விட்டுவிட வேண்டும் என்று அவள் நச்சரிக்க ஆரம்பித்து விட்டாள். அந்த முரட்டுப் பித்துக்குளியிடம் அவளுக்கு இருந்த பிரேமை அணுவளவேனும் குறைந்ததாகத் தோன்றவில்லை. அக்காவின் பிடிவாதம்தான் தெரிந்த விஷயமாயிற்றே, வேறு வழியில்லாமல் கொண்டு போய் விட்டோம். அப்போதுகூட அத்திம்பேர் அப்பாவிடம் முகம் கொடுத்துப் பேசவில்லை.

அதற்குப் பிறகு, அந்தக் கிராமத்திலிருந்து எங்கள் ஊருக்கு வரும் ஒவ்வொருவரும் அத்திம்பேர் அக்காவை ரொம்ப துன்புறுத்துவதாகவும், வீட்டில் எப்பொழுதும் இரைச்சலும் சண்டையும் தவிர வேறொன்றும் இல்லையென்றும் சொன்னார்கள். ஒரு வேளை பணக் கஷ்டம்தான் காரணமாயிருக்குமோ என்று அப்பா 500 ரூபாய் மணியார்டர் அனுப்பினார். அது அப்படியே மறுக்கப்பட்டுத் திரும்பி வந்தது.

அந்த வருஷக் கடைசியில் அப்பா திடீரென்று மாரடைப்பினால் இறந்து போனார். நாங்கள் அனாதைகளானோம். அக்கா திரும்பவும் கர்ப்பமாயிருக்கிறாள், பலஹீனம், ஜுரம் எல்லாம் சேர்ந்து கஷ்டப்படுகிறாள் என்று கேள்விப்பட்டோம். தமையன்களுக்கு வந்த கோபத்துக்கு அளவேயில்லை. "எங்களுக்கு அப்படி ஒரு தங்கை இருந்தாள் என்பதையே மறந்துவிடப் போகிறோம்!" என்றார்கள். எனக்கு எப்படி இருந்திருக்கும்? ஏக்கம் பிடித்தவன்போல் மௌனமாக ஒரு மூலையில் போய் நின்று கொண்டு கண்ணீர் சொரிந்தேன். அப்பா இருக்கும்போதே அத்திம்பேருக்கும் இவர்களுக்கும் ஜன்ம விரோதம். இப்பொழுது கேட்க வேண்டுமா?

மன்னியின் நச்சரிப்பு பொறுக்க முடியாமல், பெரிய அண்ணா தனக்குக் கொஞ்சம்கூட இஷ்டமில்லாமல் எட்டாம் மாதத்தில் அக்காவை அழைத்து வருவதற்குப் போனான். அவனுடன் கண்டிப்பாக வர முடியாது என்று மறுத்து விட்டாள் அக்கா. எலும்பும் தோலுமாக அழுக்குப் புடவை கட்டிக் கொண்டு நிற்கும் அக்காவை அந்தப் பழைய அழகி லக்ஷ்மி என்று அண்ணாவால் அடையாளம் கண்டு கொள்ளவே முடியவில்லையாம். அண்ணா எவ்வளவோ நயமாக அழைத்தும், அவள் தன் அகத்துக்காரரைத் தனியாக விட்டுவிட்டு வரமாட்டேன் என்று சொல்லி விட்டாளாம்!

அதற்குப் பிறகு நான் மெட்ரிகுலேஷன் பாஸ் பண்ணினவுடன், சென்னையிலுள்ள குவீன் மேரீஸ் காலேஜில் சேர்ந்தேன். எப்படியோ நாலு வருஷங்கள் ஓடி விட்டன. பி. ஏ. பரீக்ஷைக்கு எழுதிவிட்டு உல்லாசமாக ஹாஸ்டலில் இருந்த அன்றுதான் மேற்படிக் கடிதம் வந்தது.

## 2

சென்னையை விட்டுத் தஞ்சாவூருக்கு வந்து சேர்ந்ததும் எனக்கு எல்லா விவரங்களும் தெரிந்தன. அக்காவுக்கு மேலும் இரண்டு குழந்தைகள் பிறந்ததாம். துளிக்கூட சந்தோஷமே இல்லாமல் சண்டையுடன் கூடிய வாழ்க்கை; அத்துடன் அடிக்கடி பிரசவம்; எல்லாம் சேர்ந்து ரொம்பவும் பலஹீனமாகி டைபாயிட் ஜுரத்தில் கொண்டு வந்து விட்டதாம். அத்திம்பேர் கவனியாமல் இருந்து விட்டாராம். பெரிய அண்ணா இதைக் கேள்விப்பட்டுத் தன் விரோதத்தையும் மறந்து போய்ப் பார்த்தானாம். அக்கா சாகும் தறுவாயில் தன்னை மன்னிக்கும்படியும் தன் கணவன் பேரில் ஒருவிதமான குற்றமும் இல்லை என்றும் சொல்லிக்கொண்டே கண்களை மூடினாளாம். அந்தக் கடைசித் தறுவாயில் கூட தன் அகமுடையானை அவள் விட்டுக் கொடுக்காமல் அல்லவா இருந்திருக்கிறாள்!

அண்ணா அவளுடைய குழந்தைகளைத் தன்னுடன் அனுப்பும்படி அத்திம்பேரைக் கேட்டானாம். அந்த மூர்க்கன் தன் குழந்தைகளை வளர்ப்பதற்குத் தனக்குச் சக்தியிருக்கிறது என்று சொல்லி விட்டானாம். இப்படி முடிந்தது என் அருமை அக்காவின் துக்க சரிதம்.

ஊரில் எனக்குப் பொழுதே போகவில்லை. அக்காவுடன் உல்லாசமாக இருந்த அந்த நாட்களை நினைத்துக் கொண்டு கண்ணீர் பெருக்கினேன். திடீரென்று அக்காவின் குழந்தைகளைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை என் உள்ளத்தில் எழுந்தது. மறைந்து போன லக்ஷ்மியை ஞாபகமூட்டும் சின்னங்கள் அவைகளே அல்லவா?

ஒரு நாள் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அண்ணாவிடம் மெதுவாக என் ஆசையை வெளியிட்டேன்.

"என்ன சொல்கிறாய், பிரேமா! நிஜமாகவே லக்ஷ்மி போன பிறகு அந்தத் துரோகியின் வீட்டுக்குப் போக வேண்டும் போல் இருக்கிறதா, உனக்கு?" என்றான் அண்ணா.

"இல்லை அண்ணா! போய்விட்டு உடனே திரும்பி விடுவோம். தந்தை முரடனாய் இருந்தால் அதற்குக் குழந்தைகள் என்ன செய்யும்?" என்றேன் நான்.



"ஐயையோ! ரெண்டு நாளைக்குக் குழாயில் தண்ணீர் வராதா? அப்படின்னா பால்காரன் வரமாட்டான் போலிருக்கிறதே!"

அண்ணா சிறிது நேரம் யோசனை செய்து விட்டு, "நான் வருவது என்பது முடியாத காரியம். நீ வேலைக்காரி சுப்பம்மாவைத் துணைக்கு அழைத்துக் கொண்டு மத்தியானம் நம் காரில் போய்வா. சாயங்காலம் ஐந்து மணிக்குள் திரும்பிவிட வேண்டும். அந்தத் துஷ்டன் உன்னிடம் அவமரியாதையாய் நடந்து கொள்ளாமல் இருக்க வேண்டுமே என்று பயமாய் இருக்கிறது. ஜாக்கிரதையாய்ப் போய் வா, சீக்கிரம் வந்து விடு!" என்றான்.

இவ்வளவு சுலபத்தில் சம்மதம் கிடைத்து விடும் என்று நான் நினைக்கவே இல்லை. துள்ளி எழுந்தேன். அன்று மத்தியானமே என் அத்திம்பேரின் கிராமத்தை அடைந்தோம். கார் அக்கா வீட்டு வாசலில் நின்றதும் என் மனது 'திக், திக்' என்று அடித்துக் கொண்டது. வாசல் கதவு மூடி இருந்தது. திண்ணையில் மூன்று குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தன. பெரிய பையனுக்கு ஆறு வயது இருக்கும், அப்பா ஜாடையாக இருந்தான். இரண்டாவது பெண்ணுக்கு நாலு வயது இருக்கும்.

அக்கா குழந்தையில் எப்படி இருந்தாளோ அதேமாதிரி இருந்தாள் அவள். கடைசிக் குழந்தை கொழுகொழுவென்று ரொம்ப அழகாய் இருந்தது. அப்படியே அதை வாரி அணைத்துக் கொள்ள வேண்டும் போல் இருந்தது. அந்தக் குழந்தையை நோக்கி ஓடினேன். "கண்ணா, வாங்கோ!" என்று எல்லாவற்றையும் சேர்த்து அணைத்தேன். அவைகள் வீறிட்டு அலறிக் கொண்டு ஓடின. நான் அந்தக் குழந்தைகளைச் சமாதானப் படுத்தும் குரலில், "அழாதேங்கோ! நான் உங்கள் சித்தி! இதோ சாக்லேட், சொக்கா,





பெப்பர்மின்ட் எல்லாம் கொண்டு வந்திருக்கிறேன்" என்றேன்.

ஊஹூம்! நான் சொல்வது அந்தக் குழந்தைகளின் காதில் விழுந்தால்தானே! ஏதோ காட்டு மிராண்டிகள் மாதிரி அலறிக் கொண்டு கதவைத் திறந்து கொண்டு உள்ளே ஓடின. எனக்கு என்ன செய்வது என்று புரியவில்லை.

அப்பொழுது உள்ளேயிருந்து சாக்ஷாத் என் அத்திம்பேரே தோன்றினார். அவரைப் பார்த்தால் நல்ல தூக்கத்திலிருந்து எழுந்து வந்தவர் போல் தோன்றியது. அழுக்கு வேஷ்டியும் பனியனும் போட்டுக் கொண்டு, தலையும் சீவிக் கொள்ளாமல் அவர் தூங்குமூஞ்சியாய் இருந்தார். இருந்தாலும் முகத்தின் களை முன் போலவே இருந்தது. இந்த மோகன அழகு தானே என் அக்காவைப் படுகுழியில் தள்ளியது?

வந்தவர், "யார் நீங்கள்? தெரியவில்லையே! ஒரு வேளை நீங்கள் இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்டோ! சில கம்பெனிகளில் பெண்கள் கூட ஏஜெண்டாக வேலை செய்வதாகக் கேள்விப் பட்டேன். அவர்களில் ஒருவரா, தாங்கள்?" என்று ஒரு விஷமப் புன்னகையுடன் குறும்புத்தனமாகக் கேட்டார்.

"என் பெயர் மிஸ் பிரேமா. தஞ்சை மிராசுதார் கிருஷ்ணஸ்வாமி ஐயரின் இரண்டாவது புதல்வி. மனிதர்களைக் கண்டு மிரண்டு ஓடும்படியாக என் அக்காவின் குழந்தைகளை ஒரு பிரகிருதி வளர்த்திருக்கிறான் என்று எனக்கு இதுவரை தெரிந்திருக்கவில்லை!" என்றேன் எரிச்சலுடன்.

அத்திம்பேரின் கண்கள் ஆச்சரியத்தினால் மலர்ந்தன. "என்ன, பிரேமாவா! நிஜமாகவா! உன்னை அடையாளம் கண்டு கொள்ளவே முடியவில்லையே! எப்படி வளர்ந்து விட்டாய்? விளையாட்டாய்ப் பேசியதற்கு மன்னித்துக் கொள். உள்ளே வா!" என்றார். "வாசல் திண்ணையில் எனக்குக் கிடைத்த உபசாரம் உள்ளே வரும்படி என்னைத் தூண்டுவதாக இல்லை!" என்றேன் நான்.

அத்திம்பேரின் முகம் சிவந்தது. அவர் தமக்கு வந்த கோபத்தை மிகவும் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு "நீ என் மனதை ரொம்பக் கஷ்டப்படுத்துகிறாய், பிரேமா! குழந்தை வளர்ப்பைப் பற்றி உன்னைவிட எனக்கு அனுபவம் அதிகம் என்பதை உன்னால் மறுக்க முடியாது. மேலும் என் குழந்தைகள் நீ சொல்வதுபோல் அவ்வளவு காட்டு மிராண்டிகள் என்று எனக்குத் தோன்றவில்லை. ஒரு



வேளை உன் அண்ணன்கள் முக ஜாடை உனக்கும் கொஞ்சம் இருப்பதால் மிரண்டு ஓடினவோ என்னவோ!'' என்றார்.

நான் நறநற வென்று பற்களைக் கடித்தேன். அவர் புன்னகையுடன், "பலூ, ஸாவி, ரமா!'' என்று கத்தினார். மறு நிமிஷம் பள்ளிப் பிள்ளைகள் வரிசையாகப் போகுமே, அதுமாதிரி அந்தக் குழந்தைகள் ஒன்றின் பின் ஒன்றாய் வந்தன.

"உங்களை நான் நன்றாக வளர்க்கவில்லை என்று உங்கள் சித்தி குற்றம் சாட்டுகிறாள். அது சரியல்ல என்று காட்டுவதற்கு ஒவ்வொருவராக அவளுக்கு ஒவ்வொரு முத்தம் கொடுங்கள்!'' என்றார்.

வெகு வெட்கத்துடன் அந்த மூன்று குழந்தைகளும் அவர் சொன்னபடியே செய்தன.

நான் சிரித்து விட்டேன். அத்திம்பேரும் என்னுடன் சேர்ந்து சிரித்தார்.

அன்று மாலை நான் வீடு வந்ததும், "ஐயோ! அத்திம்பேரை என்னென்னவோ வையணும், அக்காவைக் கொன்றவர் அவர்தான் என்று ஆத்திரம் தீரச் சொல்லணும் என்றெல்லாம் நினைத்துக் கொண்டல்லவா போனேம்? கடைசியில் ஒன்றும் சொல்லாமல் வந்து விட்டோமே!'' என்று தோன்றியது.

3

இந்தச் சம்பவம் நடந்த ஒரு மாதத்துக்குப் பிறகு ஒரு நாள், "நான் போய் அக்காவின் குழந்தைகளை அழைத்து வருகிறேன். பத்து நாள் இங்கே வைத்துக் கொண்டிருந்து விட்டு, பிறகு கொண்டு போய் விட்டுவிடலாம்'' என்றேன்.

முதலில் யாருக்கும் இஷ்டமில்லை. எப்படியோ அவர்களை வழிக்குக் கொண்டு வந்து சம்மதிக்கச் செய்து விட்டேன். இரண்டாவது தடவை கிராமத்தை நோக்கி நான் ஏறிக்கொண்டிருந்த கார் விரைந்தது.

அத்திம்பேர் என்னை மரியாதையாக வரவேற்று உலக விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். கடைசியில் மெதுவாக விஷயத்தைச் சொன்னேன். "நீ ஏன் சிரமப்படுகிறாய், அம்மா! என் தலையெழுத்து, நான் கஷ்டப்படுகிறேன். என்னதான் கஷ்டப்பட்டாலும் உன் அண்ணன்களிடம் நான் ஒரு நிமிஷமேனும் என் குழந்தைகளை விட்டு வைக்க முடியாது!'' என்றார்.

"இல்லை, அப்படிச் சொல்லக் கூடாது! அந்தக் குழந்தைகளுக்கும் ஒரு மாறுதல் வேண்டாமா? திரும்பத் திரும்ப எருமை மாட்டையும் வைக்கோல் போரையுமே பார்த்துக் கொண்டிருக்கும்படியாகவா அவற்றை வைத்துக் கொண்டிருப்பது!'' என்றேன்.

"சரி, பிரேமா! உன் இஷ்டப்படி குழந்தைகளை அழைத்துக் கொண்டுபோ!'' என்றார்.

என் காதுகளை என்னால் நம்பவே முடியவில்லை. அவர் தானே எழுந்து சென்று குழந்தைகளின் முக்கியமான துணிமணிகளைச் சின்ன மூட்டையாகக் கட்டிக் கொண்டு வந்து காரில் வைத்தார். குழந்தைகளை அழைத்து, "நீங்கள் உங்கள் சித்தியுடன் போய்ப் பத்து நாள் இருங்கள். நான் அவசர வேலையாக ஊருக்குப் போகிறேன். சமத்தா யிருக்கணும்!'' என்று அன்புடன் சொன்னார்.

குழந்தைகளை அழைத்துக் கொண்டு ஊருக்கு வந்தேன். கொஞ்ச காலம் அங்கேயே வைத்துக்கொண்டிருந்த பிறகு, மீண்டும் அவர்களுடைய தந்தையிடம் கொண்டுபோய்ச் சேர்த்தேன்.

இரண்டு மாதங்கள் ஓடி மறைந்தன. அதற்குள் அண்ணாவின் கோபத்தையும் பாராட்டாமல் நான்கு தடவை கிராமத்துக்குப் போய் வந்துவிட்டேன். ஒரு நாள் கடைசிக் குழந்தை ரமா நிமோனியா ஜுரத்தினால் படுத்திருப்பதாகவும், என்னைப் பார்க்கவேண்டும் என்று அது சொல்வதாகவும் ஒரு கடிதம் வந்தது. துணைக்கு என் விதவை அத்தையை அழைத்துக் கொண்டு போனேன். அத்திம்பேர் குழந்தையின் பக்கத்தில் உட்கார்ந்து மருந்து கொடுப்பதும், நடுவில் பாக்கிக் குழந்தைகளுக்குச் சமையல் பண்ணுவதுமாக இருந்தார். இந்த நிலையில் அத்திம்பேருக்கு ஒத்தாசை செய்யாமல் என்னால் இருக்க முடியவில்லை. ஆகவே, உடனே ஊருக்குத் திரும்பி விடுவது என்ற உத்தேசத்தைக் கைவிட்டு விட்டேன். அத்தையும் என்னுடன் சில நாள் அங்கே இருக்கச் சம்மதித்தாள். ஆகவே, அன்று காரை மட்டும் நாங்கள் ஊருக்கு அனுப்பிவிட்டோம். ஒரு நாள், இரண்டு நாள் ஆயிற்று. அதற்குள் என் மனதில்தான் எத்தனை மாறுதல்கள்!






நெஞ்சுக்கும் சுவாஸப் பைக்கும்

## அபாயம் விளைவிக்கும் பருவகாலம்



கிருமி நாசன பெப்ஸை உட்கொண்டு குளிர் ஜுரத்தினின்றும் உங்களைப் பாதுகாருங்கள். அசட்டை செய்தால் நெஞ்சு உபாதைகள் ஏற்படும். வாயில் கரையும் போதே, பெப்ஸ் மிகவும் உன்னத மருந்து சத்துக்களை வெளிவிடுகிறது. சுவாஸத்தினுல் சுவாஸப் பைக்கு இழுக்கப்பட்டு — தொத்து நோய்க் கிருமிகளைக் கொன்று சுவாஸ, மார்க்கத்தை ஆற்றுகிறது. பெப்ஸ், இருமலை நிறுத்தி, மிருதுவான தோல்களிலுள்ள ரணத்தை ஆற்றி சொஸ்தமளித்து, மார்ச் சளித் தேக்கத்தையும் தகர்க்கிறது. குளிர்ஜுரம், தொண்டை வலி, இருமல், ஜலதோஷம், முறைஜுரம், மார்ச்சளி உபாதை மற்றும் நெஞ்சு சுவாஸப் பை சம்பந்தமான வியாதிகளுக்கெல்லாம் நிவாரணமளிக்கச் சிறந்த சாதனம் பெப்ஸைவிட வேறொன்றுமில்லை.




# PEPS

## பெப்ஸ்

கிருமி நாசன ஸ்வாச மாத்திரைகளைச் சாப்பிடுங்கள், எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

எப்பொழுதும் கைவசம் வைத்திருங்கள்

ஏஜண்டுகள் :—மெஸர்ஸ். தாதா & கோ., பி. டி., மதராஸ்

No. 7

## சரும, ரோம வியாதிகளை

### விரைவில் அகற்றி

சுத்தமாக்கி, சொஸ்தப்படுத்துகிறது



உலகப் பிரசித்தி பெற்ற கிருமி, நாசன அஞ்சனமான ஜாம்பக்கை உபயோகியுங்கள். அதிலுள்ள சுத்தமான மூலிகைத் தைலம், வலி-வேக்காடுகளுக்கு ஹிதமளித்து, குழிப் புண்களைப் போக்கி, கசிவு ஏற்படாமல் தடுத்து, ஜாக்கிரதையாக சொஸ்தப்படுத்துகிறது. சருமத்தில் ஏற்படும் வியாதி, காயம், படை, எக்ஸிமா, சிராய்ப்ப வலி, பரு, முதலியவைகளுக்கும் ஜாம்பக் மிகவும் சிறந்தது.




# Zam-Buk

உலகப் பிரசித்திப் பெற்ற மூலிகைக் களிம்பு

மிருகக் கொழுப்பில்லமைக்கு உத்தரவாதம்

ஏஜண்டுகள் :—மெஸர்ஸ். தாதா & கோ., பி. டி., மதராஸ்

No. 2

இராத் தூக்கம் இல்லாமல் குழந்தைகளுக்குச் சிச்ருஷை பண்ணினுர் அத்திம்பேர். தினசரி என்னை அழைத்துப் போகக் கார் வந்தது. 'நாளைக்காகட்டும், நாளைக்காகட்டும்' என்று சொல்லிக் காரைத் திருப்பி அனுப்பினேன். எப்படித்தான் எனக்கு இவ்வளவு தைரியம் வந்ததோ!

நாளடைவில் அத்திம்பேர் ரொம்ப சாது பேர்வழியாக மாறிவிட்டதாக எனக்குத் தோன்றியது. அவர் அனுவசியமாக என்னிடம் பேச்சுக் கொடுக்கவோ நான் இருந்த இடத்துக்கு வரவோ செய்யவில்லை.

நானுகவே ஒரு நாள், "அத்திம்பேர்! நான் முழுதும் தூங்குவதிலும் ஊர் சுற்றுவதிலுமா பொழுதைக் கழிக்கிறீர்கள்? உருப்படியாக ஏதாவது செய்யக்கூடாதா?" என்று கேட்டு விட்டேன்.

அத்திம்பேர் பதில் ஒன்றும் சொல்லாமல் தம் அறைக்குப் போய் ஒரு கட்டுக் காகிதங்கள், வாரப் பத்திரிகைகள் எல்லாவற்றையும் கொண்டு வந்து என் முன்னல் போட்டார். ஒவ்வொன்ருகப் பார்த்தேன். எல்லாம் பல பத்திரிகைகளில் வெளியான கதைகளும் கட்டுரைகளுமா யிருந்தன. அவற்றில் சில நான் மிகவும் ரஸித்தவை. அடுத்தபடியாக அவர் ஒரு கட்டுக் காகிதங்களை எடுத்து என்னிடம் கொடுத்தார். அவை பத்திரிகாசிரியர்களிடமிருந்து வந்திருந்த பாராட்டுக் கடிதங்களும், 50 ரூபாய், 100 ரூபாய் என்று சன்மானம் அனுப்பியிருப்பதாக எழுதி யிருந்த கடிதங்களுமாக இருந்தன.

"என் அத்திம்பேரே! எல்லோரும் உங்களைச் சோம்பேறி; மாமனுர் பணத்தை வைத்துக் கொண்டு சாப்பிடுகிறவன், நாலு காசு சம்பாதிக்கத் துப்பில்லாதவன் என்றெல்லாம் திட்டும்படி வைத்துக் கொண்டீரே! இதை யெல்லாம் அவர்களிடம் காண்பிப்பதற்கு என்ன?" என்றேன்.

"பிரேமா! அவர்களை நான் மூளையுள்ள மனிதர்களாகவே மதிக்கவில்லை. அவர்கள் என்ன வேண்டுமானுலும் சொல்லிக் கொள்ளட்டும். ஆனுல் நீயும் என்னைப் பற்றித் தப்பபிப்பிராயம் கொண்டிருப்பது எனக்கு வருத்தமாய் இருக்கிறது. உங்கள் அப்பா உன் அக்காவுக்குக் கொடுத்த காசில் ஒரு பைசாகூட நான் தொடவில்லை. கல்யாணமான புதிதில் என் கதைகள் எல்லாவற்றையும் திரட்டிப் புத்தகமாகப் பிரசுரிக்க வேண்டும் என்ற ஆசை எனக்கு இருந்தது. அதற்குப் போதிய பணம் என்னிடம் இல்லை. இதை அறிந்த லக்ஷ்மி என்னை நச்சரித்து பாங்கியிலிருந்து 1000 ரூபாய் எடுத்துக் கொள்ளச் சொன்னுள். அதற்குத்தான் உன் அண்ணன்கள் அவ்வளவு பிரமாதப்படுத்தி என்னை அவமானப் படுத்தினுர்கள். ஒவ்வொரு நாளும் மாமனுர் சிபார்சினுல் கிடைத்த உத்தியோகத்தினுல்தான் எனக்குச் சோறு கிடைக்கிறது என்பதை அவர்கள் ஞாபகப் படுத்தினுர்கள். உன் அக்காவின் நகைகளை நான் ஒவ்வொன்ருகக் கரைப்பதாகப் பொய் வதந்தி பரப்பினுர்கள். இவற்றை யெல்லாம் என்னுல் சகிக்க முடியவில்லை. ஒரு நாள் ஆவேசம் வந்தவன்போல் பணம் அத்தனையும் எடுத்துக் கொண்டு, உன் அக்காவின் நகைகள் யாவையும் பிடுங்கிக் கொண்டு பம்பாய்க்குப் போய் அங்கே இருக்கும் ஒரு பாங்கியில் உன் அக்காவின் பேரிலேயே போட்டுவிட்டு வந்தேன். எனக்கோ வேலையும் இல்லை; என் அப்பா எனக்கு வேறு காசும் வைக்கவில்லை. ஆகவே, இந்தக் குடிசையில் அடைக்கலம் புகுந்தேன். எழுத்துத் தொழிலை வெகு ஊக்கத்துடன் மேற்கொண்டேன். உன் அக்கா நிஜமாகவே என்னிடம் ரொம்ப அன்பு வைத்திருந்தாள். ஆனுல் பிடிவாத குணமும் அசட்டுத்தனமும் எங்கள் இரண்டு பேர் வாழ்க்கையையும் கசப்பாக்கி விட்டன. என்னுடைய எளிய வாழ்க்கை உன் அக்காவுக்குப் பிடிக்கவில்லை. எடுத்ததற்கெல்லாம் என்னிடம் சண்டை போட்டாள். பாங்கியிலிருக்கும் பணத்தை எடுத்து வைத்துக் கொண்டு உல்லாசமாக இருக்கவேண்டும் என்ருள். அதற்கு நான் இடம் கொடுக்கவில்லை. ஆகவே, ஒரு நாளாவது அவள் என்னை மன நிம்மதியுடன் இருக்க விடவில்லை; தஞ்சைக்குத் திரும்பிப் போய்ப் பட்டண வாசம் செய்ய வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தாள். 'வரும்படி இன்னும் கொஞ்சம் அதிகமாகட்டும், போவோம். சற்றுப் பொறுமையுடன் இரு!' என்று சொல்லிப் பார்த்தேன்; கேட்கவில்லை. இப்படியே அவள் பிடிவாதம் பிடித்துப் பிடித்துத் தன் உடம்பைத் தானே கெடுத்துக் கொண்டாள். உன் அக்கா உடம்பு சரியாகி எழுந்திருந்தால், அவள் இஷ்டப்படியே பட்டணத்தில் புதிய வாழ்க்கை ஆரம்பிக்கலாம் என்று மனக்கோட்டை கட்டியிருந்தேன். ஆனுல் பகவானுடைய எண்ணம் வேறுவிதமாக இருந்தது. எனக்கோ

வயது இன்னும் இருபத்தெட்டுகூட ஆகவில்லை. வாழ்க்கையில் அதற்குள் கசப்பு ஏற்பட்டு விட்டது. மூன்று தாயில்லாக் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு என் சிறிய தோள்களில் விழுந்து விட்டது" என்று உருக்கமுடன் சொல்லிக் கொண்டே போனார்.

என் கண்களில் நீர் துளித்தது. ஐயோ! இத்தனை நல்லவரையா உலகம் மூர்க்கன், மூடன் என்றெல்லாம் புறக்கணித்தது! அக்கா தன் அசட்டுத்தனத்தினாலும் பிடிவாதத்தினாலும் ஒரு புருஷனின் வாழ்க்கையை இப்படி வேம்பாகப் பண்ணி விட்டாளே! அக்கா அத்திம்பேரைப் படுத்தினாளா, அல்லது அத்திம்பேர் அக்காவைப் படுத்தினாரா?

திடீரென்று ஒரு எண்ணம் பிறந்தது. நான் என் அக்கா பண்ணின தவறுக்குப் பரிகாரம் தேடக் கூடாது? அவர் வாழ்வை நான் என் சந்தோஷகரமாக்கக் கூடாது? குழந்தைகளை அன்புடனும் ஜாக்கிரதையுடனும் வேறு யார் பார்த்துக் கொள்வார்கள்?

ஆனால் அத்திம்பேர் என்னை விரும்புவாரா?

## 4

அன்று சாயங்காலம் எங்கள் கார் வாசலில் வந்து நின்றது. என் பெரிய அண்ணா அவசர அவசரமாக உள்ளே வந்தான். அவன் என்னை எரித்து விடுபவன்போல் பார்த்து, "என்ன? ஊருக்குத் திரும்பி வருவதாக உனக்கு உத்தேசமே இல்லையா? இதையே உன் நிரந்தர வீடாக ஆக்கிக் கொள்ள எண்ணமோ? புறப்படு சீக்கிரம்!" என்றான்.

"குழந்தைக்கு உடம்பு கொஞ்சம் சரியாகட்டும், வந்து விடுகிறேன்" என்றேன்.

"எனக்காக நீ கஷ்டப்படாதே, அம்மா! போ!" என்று அத்திம்பேர் கண்ணீர் பெருகச் சொன்னார்.

"நான் என்ன வந்தாலும் அவரைக் கைவிடுவதில்லை!" என்று உள்ளூற திடசங்கல்பம் செய்து கொண்டேன்.

அப்புறம் என்ன? வீட்டில் உள்ளவர்களிடம் மெதுவாய் என் எண்ணத்தை வெளியிட்டேன். "ஒரு பெண்ணை ஏற்கெனவே பலி கொடுத்தாகி விட்டது. உன்னையும் அவனுக்குப் பலி கொடுக்க வேண்டுமா?" என்று ஒவ்வொருவரும் கத்தினார்கள்.

ஆனாலும் என் பிடிவாதம் அக்காவின் பிடிவாதத்தைக்கூடத் தோற்கடிக்கும்படியாக இருந்தது. ஆகவே, கடைசியில் அவர்கள் "உன்னைக் கல்யாணம் மட்டும் பண்ணிக் கொடுத்து விடுகிறோம். அப்புறம் உனக்கும் எங்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லை!" என்று சொல்லி விட்டார்கள்.

நானும் அப்பொழுதிருந்த நிலையில், "ரொம்பச் சரி" என்றேன். கடைசியில் என்ன? என் இஷ்டப்படியே எல்லாம் நடந்தது. கடவுளுடைய அநுக்கிரகம் எங்களுக்குப் பரிபூரணமாக இருந்தது. சீக்கிரமே ஹைதராபாத்தில் 700 ரூபாய் சம்பளத்தில் என் கணவருக்கு ஒரு வேலை கிடைத்தது. நாங்கள் சந்தோஷமாகவும் சௌக்கியமாகவும் வாழ்ந்து வந்தோம். சம்ஸார சாகரத்தில் எங்கள் ஜீவியப் படகு அமைதியுடன் சஞ்சாரம் செய்ய ஆரம்பித்தது.

என் அண்ணன்மார் முன்பு பரிகாசமாக, "உன் அக்காவின் புக்ககத்துக்கு நீயும் போய்விடு!" என்று சொன்னார்களல்லவா? அந்த வாக்கும் பலித்தது!

## சக்கரம் இல்லை




சிறுவன்:—என் அப்பா! என் யானைக்கு இருப்பது போல் அந்த யானைக்கு ஏன் காலில் சக்கரம் இல்லை?



சிறந்த போட்டோக்களுக்கு




போட்டோவைத் தொழிலாகக் கொண்டவர்களுக்கும் சரி, பொழுது போக்காகக் கொண்டவர்களுக்கும் சரி, உங்கள் காமிராவிற்கு மிகப் பொருத்தமான அதிவேகம் பொருந்திய பிலிம் இதோ இருக்கிறது—வீட்டினுள் எடுப்பதற்கும் வெளிப்புறக் காட்சிகளுக்கும் உகந்தது. கேவார்ட்ஸ் பான்க்ரோமோஸாவின் வர்ண பேத சக்தி ஓர் பிரத்யேக அம்சம்.

உள்ளூர் போட்டோ சாமான் விற்பனையாளரிடம் பாருங்கள்

Gevaert

இந்தியாவில் மொத்த விற்பனையாளர்கள்

அல்லைய்ட் போட்டோகிராபிக்ஸ் லிமிடெட்

பம்பாய் - கல்கத்தா - மதராஸ்

# பால் பிளேடுகள் உட்குழிவு கொண்டவை நீடித்த நாட்களுக்கு க்ஷவரம் செய்கின்றன




பால் பிளேடுகள் வளைந்து கொடுக்கும்தன்மை யுடையதால் அது ஒவ்வொரு ரோமத்தையும் ஒரே தடவையில் மேல் தோல் மட்டத்திற்கு மழுங்க க்ஷவரம் செய்து சருமத்திற்கு பட்டுபோன்ற மிருதுத் தன்மை கொடுக்கிறது. ஆதலால் அதிகம் அழுத்தி க்ஷவரம் செய்ய வேண்டியதில்லை. பால் பிளேடுகள் நீடித்துழைக்கின்றன.

இரண்டு முனையுடையது 4 க்கு 5 அணு




அமெரிக்காவில் கண்டு பிடிக்கப் பட்டது.

PBC7A TAMIL

உட்குடைந்து தீட்டப்பட்ட ரேஸர் பிளேடுகள்

எல்லா சாதாரண ரேஸர் மிஷின்களிலும் சரியாக பொருந்துகின்றன.
சோல் விநியோகஸ்தர்கள்: இந்தியன் கமர்ஷியல் கம்பெனி லிட்.
45-47, அப்போலோ தெரு, போர்ட், பம்பாய்.

தென்னிந்தியாவுக்கு சோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்:
மெஸர்ஸ். பாரி & கம்பெனி, லிமிடெட்
தபால் பெட்டி நெ. 12, மதராஸ் & கிளைகள்






# சந்திர ஹாரம்

ஆசிரியர்: பிரேம்சந்த் | மொழிபெயர்ப்பு: ரா. வீழிநாதன்

**வா**சற்படி வரை வந்த ரமாநாத் மேலே அடி எடுத்து வைக்காமல் தயங்கி நின்று விடவே, தேவீதீனுக்கு அவன் கடைத் தெருவுக்கு வரப் பயப்படுகிறானோ என்ற சந்தேகம் உதித்தது. ஆகவே, அவன் எப்படியாவது தைரியமூட்டி ரமாநாத்தைக் கடைத் தெருவுக்கு அழைத்துக் கொண்டு போய்விட வேண்டும் என்ற நோக்கத்துடன், "என் அப்பா, நின்று விட்டாய்? வரவில்லையா?" என்று கேட்டான்.

"இல்லை, நான் வந்து என்ன செய்யப் போகிறேன்? நீ மட்டும் போய் விட்டு வா!" என்றான் ரமாநாத்.

"ஏன்? பயமா யிருக்கிறதா, என்ன?"

"அதெல்லாம் ஒன்று மில்லை. நான் வருவதனால் என்ன பிரயோசனம்?"

"அப்படியானால் நான் மட்டும் போய் என்ன செய்வதாம்? நீயும் வந்தால் அல்லவா உனக்குப் பிடித்த துணியை எடுத்துக் கொள்ளலாம். புறப்படு, சொல்லுகிறேன். அப்படியே துணியை வாங்கித் தையற்காரனிடமும் கொடுத்துவிட்டு வருவோம்."

"இல்லை, நீ உனக்குப் பிடித்ததாக வாங்கி வா. நீ எது வாங்கி வந்தாலும் எனக்குச் சம்மதம்."

"எதற்காக இப்படிப் பயந்து சாகிறாய்? உன்னைப் போலீஸ் விழுங்கிவிடாது!"

"நான் அதற்காகப் பயப்படவில்லை, அப்பா! எனக்கு என்னவோ அங்கு வரப் பிடிக்கவில்லை."

"எதற்காக இப்படிப் புளுகுகிறாய்? உனக்குப் பயம் இல்லை என்றால் என்னோடு கடைத்தெருவுக்கு வா! உன்னை யாரும் ஒன்றும் செய்து விடாமல் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்று தேவீதீன் எவ்வளவோ வருந்தி வருந்திக் கூப்பிட்டுப் பார்த்தான். ரமாநாத் எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை. அவன் தனக்கு எவ்வளவுதான் பயம் இல்லை என்று சொன்னபோதிலும், வீட்டை விட்டு வெளிக் கிளம்பவே அவனுக்குத் தைரியம் வரவில்லை. 'போலீஸ்காரன் என்னைப் பிடித்து விட்டால், இந்தத் தேவீதீனால் என்ன செய்ய முடியும்? போலீஸ்காரன் காலில் விழுந்து வேண்டுமானால் கெஞ்சிப் பார்ப்பான். அவன் தேவீதீனுக்கு ரொம்ப ரொம்ப வேண்டியவனாகவே இருந்தாலும் கூட, இவனுடைய வார்த்தைக்குச் செவி சாய்ப்பான் என்பது என்ன நிச்சயம்? சர்க்கார் காரியத்தில் அவன் விட்டுக் கொடுப்பானா? கடைசியில் நான் அல்லவா கஷ்ட நிஷ்டூரங்களை யெல்லாம் அனுபவிக்க வேண்டியவன்! அப்படிப் போலீஸின் கையில் நாம் மாட்டிக்கொண்டு விட்டால் பிறகு பிரயாகைக்குப் போவதற்குப் பதிலாகச் சிறைக் கம்பிகளை எண்ணவேண்டி வந்துவிடலாம். அதற்கு இதைவிட வீட்டிலேயே அடைபட்டுக் கிடப்பது எவ்வளவோ மேல்' என்று ரமாநாத்துக்குத் தோன்றிற்று. ஆகையால் வீட்டை விட்டு வரவே முடியாது என்று திட்டமாய் மறுத்து விட்டான். கடைசியில் தேவீதீன் வேறு வழியில்லாமல் தனியாகவே கடைத் தெருவுக்குப் புறப்பட்டான்.

தேவீதீன் ஒரு மணி நேரம் கழித்துத் திரும்பி வந்தபொழுது ரமாநாத் மொட்டை மாடியில் உலாவிக் கொண்டிருந்தான்.

தேவீதின் மாடிக்குச் சென்று, "மணி எத்தனை ஆகிறது, தெரியுமா? பன்னிரண்டு அடிக்கப் போகிறது. இன்றைக்கு நீ இன்னும் சமைக்கவே ஆரம்பிக்கவில்லையே! ஊருக்குப் போகப் போகிறோம் என்ற சந்தோஷத்தில் சாப்பாட்டைக்கூட மறந்து விட்டாயா, என்ன?" என்று கேட்டான்.

ரமாநாத் வெட்கிப் போய், "சமைத்தால் போயிற்று! அதற்கு எத்தனை நாழிகை யாகிவிடப்போகிறது?" என்றான்.

"இதோ பார், மாதிரித் துணிகள் வாங்கி வந்திருக்கிறேன். இவற்றில் எது பிடித்திருக்கிறது, சொல்லு. வாங்கி வருகிறேன்" என்று சொல்லியவாறே தேவீதின் தான் கொண்டு வந்திருந்த பற்பல மாதிரித் துணிகளை எடுத்து ரமாநாத்தின் முன்னிலையில் போட்டான்.

ரமாநாத் மாதிரித் துணிகளைப் புரட்டிப் பார்த்தவாறே, "எல்லாம் விலை ரொம்ப ஜாஸ்தியா யிருக்கிறதே! ஏதாவது மலிவானதாகக் கொண்டுவரக் கூடாதா?" என்று கேட்டான்.

"மலிவான துணிகள் இல்லாமல் இல்லை. ஆனால் எல்லாம் அயல் நாட்டுத் துணிகள். அதனால்தான் கொண்டுவரவில்லை."

"அப்படியானால் நீ அயல்நாட்டுத் துணிகளை உடுத்துவதில்லையா?"

"இருபது வருஷ காலமாக அயல் நாட்டுத் துணிகளை நான் வாங்குவதில்லை. நம் நாட்டுத் துணிகள் வாங்குவதென்றால் காசு கொஞ்சம் கூடப் போட வேண்டியிருக்கிறது. ஆனால், நம் நாட்டுக் காசு நம் நாட்டிலேயே இருக்கிறதல்லவா! அதனால்தான் நான் அயல் நாட்டுத் துணிகளை வாங்குவதில்லை."

ரமாநாத் சிறிது வெட்கத்துடன், "நீ பெரிய தீவிரவாதியாக இருப்பாய்போலிருக்கிறதே!" என்றான்.

தேவீதினின் முகத்தில் களை பொருந்திய ஒளி வீசலாயிற்று. அவனுடைய உள்ளடங்கிய கண்கள் ஜொலித்தன. உடல் நரம்புகள் புடைத்தன. அவன் ஒரு தனிப் பெருமிதத்துடன், "எந்த நாட்டின் அன்னத்தையும் நீரையும் உட்கொண்டு நாம் உயிர் வாழ்கிறோமோ, அந்த நாட்டுக்காக நாம் இதுகூடச் செய்யவில்லை என்றால் நாம் உயிருடன் இருப்பதும் இல்லாமலிருப்பதும் ஒன்றுதான். இந்தச் சுதேசி இயக்கத்துக்காக, என் இரண்டு பிள்ளைகளைக்கூட நான் பலி கொடுத்திருக்கிறேன், அப்பா! அவர்களுடைய தேகக் கட்டைப் பற்றி உனக்கு எப்படிச் சொல்லுவது? இரண்டு பேரும் அயல் நாட்டுத் துணிக் கடை ஒன்றின் வாசலில் நிறுத்தப்பட்டிருந்தனர். அவர்கள் வாசலில் மறியல் செய்து கொண்டு நின்ற பொழுது யாருக்காவது துணி வாங்குவதற்கு உள்ளே போகத் தைரியம் ஏற்பட்டால்தானே? அவர்கள் துணி வாங்க வருபவர்களைக் கெஞ்சிக் கூத்தாடி, கைகூப்பி வேண்டி, வெட்கித் திரும்பிப் போகும்படி செய்து விடுவார்கள். அதனால் கடைப் பக்கம் எவனுமே தலை காட்டுவதில்லை. இதைப் பார்த்ததும் கடைக்காரர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து போய்க் கமிஷனரிடம் முறையிட்டார்கள். அதைக் கேட்டதும் அவன் கோபா வேசத்துடன் மறியல் செய்பவர்களைக் கடைத் தெருவிலிருந்து வெளியேற்றுமாறு இருபது வெள்ளையர்களை ஏவி விட்டான். வெள்ளையர்கள் என்னுடைய மக்கள் இருவரையும் அங்கிருந்து உடனே போய்விடுமாறு சொன்னார்கள். ஆனால், இருவரும் அங்கிருந்து சிறிதும் அசைந்து கொடுக்கவே யில்லை. ஒரேயடியாகக் கூட்டம் கூடி விட்டது. வெள்ளையர்கள் அவர்கள் மீது குதிரையை ஏற்ற முயன்றனர். அப்பொழுதும் அவர்கள் சிலைபோல நின்றார்களே தவிர நகர்ந்து கொடுக்கவில்லை. கடைசியில் எதற்கும் தங்கள் ஜபம் சாயாமற் போய் விடவே அந்த வெள்ளையர்கள் என் மக்கள் இருவரையும் தடி கொண்டு அடிக்க ஆரம்பித்தனர். தடியடிக்குங்கூட அவர்கள் அசைந்து கொடுக்கவில்லை. அடி தாளாமல் பெரியவன் சுருண்டு விழுந்துவிட்டான். உடனே சின்னவன் அந்த இடத்தில் போய் நின்று கொண்டான். அவர்கள் இரண்டு பேரும் தங்கள் தங்கள் தடியை எடுத்துக் கொண்டு சண்டைக் கென்று புறப்பட்டிருந்தால், அந்த இருபது வெள்ளையர்களையும் ஒரு கை பார்த்திருப்பார்கள். ஆனால், அவர்கள் காந்திமகான் சொன்ன சொல்லை வேதவாக்காகக் கொண்டு நடந்ததால் அப்படியெல்லாம் செய்ய முன்வரவில்லை. கடைசியில் அடிமேல் அடி விழுந்ததனால் சின்னவனும் மயங்கிக் கீழே விழுந்து விட்டான். இரண்டு பேரையும் ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக் கொண்டு போனார்கள். அன்று இரவே இருவரும் இறந்து விட்டார்கள். உன் மேல் ஆணை வைத்துச் சொல்லுகிறேன், 'இப்படிப்





"இதோ பார், மாதிரித் துணிகள் வாங்கிவந்திருக்கிறேன்......"

பட்ட தியாகிகள் நமக்குப் பிள்ளைகளாகப் பிறந்தார்களே!' என்ற கர்வத்தில், அந்தச் சமயம் நான் ஒரு சுற்றுப் பருத்து விட்டது போன்ற உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. என் கால்கள் தரையில் பாவவே யில்லை. 'மற்றப் பிள்ளைகளையும் பகவான் அகாலத்தில் பிடுங்கிக் கொள்ளாமல் நம்மிடமே விட்டு வைத்திருந்தால், இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களையும் தேச சேவைக்காக அனுப்பி வைக்கலாமே!' என்ற ஆசைதான் அந்தச் சமயத்தில் என் மனத்தில் எழுந்தது. அவர்களுடைய சவ ஊர்வலத்தின் பொழுது ஜனக் கூட்டம் லட்சத்துக்கு மேலிருக்கும். கங்கைக்கரையில் கொண்டு போய்ப் பிள்ளைகளுக்குக் கொள்ளி வைத்து விட்டு, நான் நேரே கடைத் தெருவுக்குப் போய், பிள்ளைகள் மறியல் செய்த அதே இடத்தில் நின்று கொண்டேன். துணிக் கடைப் பக்கம் ஈ காக்கைகூடத் தலைகாட்டவில்லை. எட்டு நாட்கள் — வள்ளிசாக எட்டு நாட்கள் —நான் அந்த இடத்தை விட்டு நகரவில்லை. விடியற்காலை நேரத்தில் குளித்து விட்டு வருவதற்காக மாத்திரம் அரை மணி—ஒரு மணி நேரம் நான் அங்கே யிருந்திருக்க மாட்டேனோ, என்னவோ! மற்ற நேரங்களில் எல்லாம் அங்கேயேதான் பழியாய்க் கிடப்பேன். ஒன்பதாவது நாள் கடைக்காரர்கள் எல்லாரும் அயல் நாட்டுத் துணிகளை வரவழைப்பதில்லை என்று பிரதிக்ஞை செய்து கொடுத்த பிறகுதான், நான் மறியலை நிறுத்தினேன்" என்று சொன்னான்.

ரமாநாத் மிக்க வியப்புடன், "நீதான் உண்மையில் தேசபக்தன். உன்னைப் போலவும், உன் பிள்ளைகளைப் போலவும் உண்மையான தேசபக்தர்களை நான் கண்டதேயில்லை. உன்னைக் காணக் கொடுத்து வைத்தது, நான் செய்த பெரும் பாக்கியம் என்றுதான் சொல்ல வேண்டும்" என்று புகழ்ந்தான்.

ரமாநாத்தின் புகழுரையைத் தேவீதீன் அவ்வளவாகக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. தனக்கு எழுந்த அதே தியாக உணர்ச்சியின் வேகத்தில் அவன், "பெரிய மனிதர்கள் என்று சொல்லிக்கொண்டு திரிகிறார்களே, அவர்களால் ஒரு காரியமும் உருப்படியாகச் செய்ய முடியாது. அவர்களுக்கு நன்றாக அழத் தெரியும்; பெண்களைப்போல நீலிக் கண்ணீர் வடிக்கத் தெரியும். நான் எத்தனையோ பெரிய

பெரிய தேசபக்தர்களைப் பார்த்திருக்கிறேன். மேனாட்டுச் சாராயம் இல்லாமல் ஒரு நிமிஷம்கூட அவர்களால் இருக்க முடிவதில்லை. அவர்களுடைய வீடுகளில் எங்கே பார்த்தாலும் அயல் நாட்டுச் சாமான்கள்தான் நிறைந்து கிடக்கும். வெளிப் பகட்டுக்காக மாத்திரம் நம் நாட்டுச் சாமான்களில் சிலவற்றை வாங்கி வைத்திருப்பார்களே யொழிய, மற்றப்படித் தங்கள் சொந்த உபயோகத்துக்கு அயல் நாட்டுச் சாமான்க்ள் தான் வாங்குவார்கள். இந்தத் தேச பக்தர்களில் சின்னவர் பெரியவர் எல்லோருக்குமே, 'தான் மாத்திரம் சுக போகங்களையும் சிற்றின்பங்களையும் அனுபவித்துக் கொண்டு ஆனந்தமாக வாழ வேண்டும். மற்றவர்கள் எப்படிப் போனால் நமக்கு என்ன?' என்பதுதான் அந்தரங்க எண்ணம். ஒரு சமயம் இங்கே ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடந்தது. பிரசங்க மேடையில் நின்றுகொண்டு ஒரு பிரசங்கி வாயில் வந்தபடி யெல்லாம் வீரகர்ஜனை புரிந்தார். அவர் பேசி முடித்து விட்டுக் கீழே இறங்கி வந்ததும் நான் போய், "சுவாமி, சுயராஜ்யத்தைப் பற்றி இவ்வளவு அமர்க்களமாகப் பேசினீர்களே! உண்மையை ஒளிக்காமல் சொல்லுங்கள், உங்களுடைய மனக்கண் முன்பு சுயராஜ்யத்தின் உருவம் எப்படிக் காட்சி அளிக்கிறது? நல்ல கொழுத்த சம்பளம் வாங்கலாம். இங்கிலீஷ்காரனைப் போல ஆனந்தமாகப் பங்களாவில் வாழலாம். மசூரி, சிம்லா முதலிய இடங்களுக்குப் போய் ஆனந்தமாகக் காற்று வாங்கலாம். காரில் ஆனந்தமாகப் பவனி வரலாம். சுற்றத்தார்களுக்கு நல்ல நல்ல வேலைகள் வாங்கிக் கொடுக்கலாம் என்றெல்லாம்தானே உங்களுக்குத் தோன்றுகிறது? இந்தச் சுயராஜ்யம் கிடைப்பதனால் தேசத்துக்கு என்ன நலன் ஏற்படப் போகிறது? சொல்லுங்களேன், 'பார்க்கலாம்' என்று கேட்டேன். ஆசாமி பதில் சொல்ல வகையறியாமல் 'திரு திரு' வென்று விழித்தார். நான் விடவில்லை. 'நீங்கள் ஒரு நாளைக்கு ஐந்து தரம் ஆனந்தமாகச் சாப்பிட வேண்டும். ஏழை எளியவர்களான குடியானவர்கள் வயிற்றில் ஈரத் துணியைக் கட்டிக்கொண்டு கிடக்க வேண்டும். இதுதானே நாம் இத்தனை நாட்களாகக் காணும் சுயராஜ்யத்தின் பகற்கனவு? ஏழைகள் எப்படிப் போனால் உங்களுக்கு என்ன? சர்க்கார் ஏழைகளின் ரத்தத்தை உறிஞ்சி உங்களுக்கு வாய்க்கரிசி போட்டால் சரி, வாயை மூடிக்கொண்டு பேசாமல் இருந்து விடுவீர்கள். சுயராஜ்யம் கிடைப்பதற்கு முன்பே உங்கள் சுய காரியத்தைச் சாதித்துக் கொள்ளப் பார்க்கும் நீங்கள், சுயராஜ்யம் கிடைத்த பிறகு ஏழை மக்களைக் குழி தோண்டியே புதைத்து விடுவீர்கள்' என்றேன். ஆசாமி அப்படியே அயர்ந்து விட்டார். அவருக்குப் பதில் பேசத் தோன்றினால்தானே?" என்றான்.

தேசத் தலைவர்கள் மீது தேவிதீன் சாட்டும் இந்தக் குற்றச் சாட்டை ரமாநாத் ஒத்துக் கொள்ளவே தயாராயில்லை. அவனும் படித்தவர்களின் கும்பலில் ஒருவன்தானே! ஒத்துக்கொள்ள அவனுக்கு எப்படி மனம் வரும்? ஆகவே அவன், "படித்தவர்கள் குடியானவர்களுடைய கஷ்ட நிஷ்டூரங்களைக் கவனிப்பதே யில்லையென்று நீ சொல்லுவதை நான் ஒருநாளும் ஒத்துக்கொள்ள மாட்டேன். அவர்களிலும் எத்தனையோ பேர் விவசாயத்தைக் கொண்டு வாழ்பவர்கள்தானே? 'நாம் கஷ்டப்படுவதனால் குடியானவர்களுக்கு நன்மை ஏற்படும்' என்பது தெரிந்தால் அவர்கள் சிறிதும் தயங்க மாட்டார்கள். 'நாம் குறைத்துச் சம்பளம் வாங்கிக் கொண்டால் மிகுதியாகும் தொகை குடியானவர்களின் க்ஷேமத்துக்காகச் செலவிடப்படும்' என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்பட்டு விட்டால், அவர்கள் தங்கள் சம்பளத்தைக் குறைத்துக் கொள்ளப் பின்வாங்கவே மாட்டார்கள். ஆனால் அன்னியன் அதை அடித்துக் கொண்டு போவதைக் காட்டிலும் நாமே ஏன் அடையக் கூடாது என்று எண்ணுகிறார்களே யொழிய வேறொன்றும் இல்லை" என்றான்.

"அப்படியானால் சுயராஜ்யம் கிடைத்த பிறகு இப்படி ஐயாயிரம்—ஆறாயிரம் சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தர்கள் ஒழிந்து விடுவார்களா? வக்கீல்களுடைய சுரண்டல் ஒழியுமா? போலீஸ்காரர்களின் அட்டூழியங்களும் லஞ்சமும் அறவே நின்று விடுமா?" என்று தேவிதீன் கேள்விக்கு மேல் கேள்விகளை அடுக்கினான்.

இந்தக் கேள்விகளைக் கேட்டதும் ரமாநாத் அரண்டு விட்டான். இதுவரை அவன் இதைப்பற்றி யெல்லாம் சிந்தனை செய்தவனே அல்ல. ஆனால், நல்ல வேளையாக அவனுக்கு உடனே பதில் தோன்றி விட்டது. "அப்புறம் எந்தக் காரியமும் பொதுஜன அபிப்பிராயப்படித்தான் நடக்கும். பொது மக்கள் ஆபீஸர்களின் சம்பளத்தைக் குறைத்தாக வேண்டும் என்று சொல்லிவிட்டால், ஆபீஸர்களின் சம்பளம் தானாகக் குறைந்து விடும். கிராமப் புனருத்தாரண கைங்கரியத்துக்குப் பொது மக்கள் கேட்கும் மான்யம் அளிக்கப்படும். எதற்கும் சாவி பொது மக்களின் கையில்தான் இருக்கும். அவர்கள் சொற்படிதான் சகல அலுவல்களும் நடக்கும்" என்று அவன் ஒரு போடு போட்டான்.



# வீடு கிடைத்தது!




ஒருவர் :—என்ன ஸார் இது! இந்த மனிதர் சைக்கிள் தெப்பம் விடுகிறாரா, என்ன?
மற்றொருவர் :—இல்லை ஸார், இல்லை! நீராழி மண்டபத்துக்குக் குடி வந்து விட்டாரோ, இல்லையோ! ஆபீஸிலிருந்து வீட்டுக்குப் போகிறார்!

தேவிதீன் புன்முறுவலுடன், "உனக்கும் இந்த விஷயங்கள் எல்லாம் நன்றாகத் தெரிகிறதே! நான் நினைத்ததையே நீயும் சொல்லி விட்டாயே! கடவுள் புண்ணியத்திலே நான் இன்னும் கொஞ்சகாலம் உயிருடன் இருக்க வேண்டும். முதன் முதலில் இந்த மேனாட்டுச் சாமான்கள் மீதெல்லாம் வரியை இரட்டிப்பாக்கிவிட வேண்டும். மோட்டார்களுக்கு நாலு மடங்கு வரி விதிக்க வேண்டும் என்று நான் கிளர்ச்சி செய்வேன். அதிருக்கட்டும், நேரமாகிறது. நீ உன் சமையல் வேலையைப் பார். சாயந்திரம் தையற் கடைக்குப் போகலாம். நானும் சாப்பிடப் போகிறேன்" என்று சொல்லி விட்டுத் தேவிதீன் கீழே இறங்கிச் சென்றான்.

சாயந்திரம் கையெழுத்து மறையும் நேரம் தேவிதீன் மாடிக்கு வந்து, "வா, அப்பா! இருட்டி விட்டது. கடைத்தெருவுக்குப் போய் வருவோம்" என்று அழைத்தான்.

ரமாநாத் கவலை தோய்ந்த முகத்துடன் கன்னத்தில் கை வைத்த வண்ணம் உட்கார்ந்திருந்தான். தேவிதீன் கூப்பிட்டதும் அவன், "இல்லை அப்பா, நான் ஊருக்குப் போகப் போவதில்லை" என்றான்.

தேவிதீன் ஆச்சரியத்துடன், "ஏன்? என்ன விஷயம்?" என்று கேட்டான்.

ரமாநாத்தின் கண்களில் நீர் ததும்பியது. "நான் செய்திருக்கும் காரியத்துக்கு, ஊராரின் முகத்தில் எப்படி விழிப்பது? அப்பொழுதே நான் எங்கேயாவது போய்த் தூக்குப் போட்டுக் கொண்டல்லவா செத்திருக்க வேண்டும்!" என்றான்.

இதைக் கூறியதும் அவனுக்குத் தன்னையும் மீறி அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. அவனுடைய உள்ளத்தின் ஆழத்தில் இவ்வளவு நாட்களாக மூர்ச்சை யுற்று அமுங்கிக் கிடந்த வேதனை, தேவியினுடைய அன்பு என்னும் குளிர்ந்த நீர் பட்டதும் நினைவு பெற்று விழித்து எழுந்து விட்டது. அந்த வேதனைதான் ரமாநாத்தை அப்படித் தன்னையும் மறந்து அழும்படி செய்து விட்டது.

## இருபத்தேழாம் அத்தியாயம்
## யாருக்குப் பரிசு?

வெகு நாட்களுக்குப் பின்னர் ஒரு நாள் இரவு எட்டு மணி சுமாருக்கு ரமாநாத் வாசக சாலையிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தான். அப்பொழுது வழியில் சில வாலிபர்கள் நின்று கொண்டு சதுரங்க ஆட்டம் சம்பந்தமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். ரமாநாத் சற்று நேரம் நின்று அவர்களுடைய பேச்சைக் கவனித்தான். தினசரிப் பத்திரிகை யொன்றில் ஒரு சதுரங்கப் படம் வெளிவந்திருக்கிறது என்றும், அதற்குச் சரியான விடை கண்டு பிடித்துச் சொல்லுவோருக்கு ஐம்பது ரூபாய் வெகுமதி யளிக்கப்படும் என்றும், பெரிய பெரிய ஆட்டக்காரர்கள் கூட அதற்கு விடை கண்டு பிடிக்க முடியாமல் விழிக்கிறார்கள் என்றும் அவர்களுடைய பேச்சிலிருந்து தெரிய வந்தது. அந்தப் பேச்சைக் கேட்ட பிறகு, கொஞ்ச நேரத்துக்கு முன்பு வாசகசாலையில் பலர் ஒரே பத்திரிகையை வட்டமிட்டுக் கொண்டு நின்றதும், சிலர் அதைப் பார்த்து ஏதோ குறித்துக் கொண்டு போனதும் ரமாநாத்துக்கு நினைவு வந்தது.

ரமாநாத்துக்கு அங்கே நின்றுகொண்டிருந்த வாலிபர்களில் யாரையுமே தெரியாது. இருந்தாலும், அவன் அந்தச் சதுரங்கப் படத்தைப் பார்க்க வேண்டும் என்ற அவாவினால் உந்தித் தள்ளப்பட்டு, அவ்வாலிபர்களின் அருகே சென்று, "அந்தப் படம் உங்கள் யாரிடத்திலாவது இருக்கிறதா?" என்று கேட்டான்.

கம்பளிக்குள் தன்னைச் சுருட்டி மடக்கிக்கொண்டு நிற்கும் ரமாநாத்தைத் திரும்பிப் பார்த்த வாலிபர்கள் அவனை ஒரு அசடன் என்றே எண்ணினர். ஆகையால் ஒரு வாலிபன் அவனைப் பார்த்து மிகவும் ஏளனமாக, "இருக்கிறது; ஆனால் நீ பார்த்து என்ன செய்துவிடப் போகிறாய்? ஆனானப்பட்ட பெரிய பெரிய கைகளால் கூட அதற்கு விடை கண்டு பிடிக்க முடியவில்லை. சுண்டைக் காய்க்குச் சமானமான உன்னால் என்ன புரட்டிவிட முடியப் போகிறது?" என்றான்.

பக்கத்தில் நின்று கொண்டிருந்த இன்னொரு வாலிபன், "உன்னை யார் இதெல்லாம் கேட்டார்கள்? காட்டச் சொன்னால் காட்டுவதை விட்டுவிட்டு, மேலே மேலே ஏதோ பேசிக் கொண்டே போகிறாயே! இவருடைய மூளைக்குச் சரியான விடை எட்டிவிட்டால் நீ 'வேண்டாம்' என்று சொல்லி விடுவாயோ? நீங்கள் பாருங்கள், ஸார்!" என்றான்.

அவனுடைய பேச்சில் சிறிதும் கண்ணியம் தொனிக்கவே யில்லை; பரிகாசம்தான் தொனித்தது. அவன் பேசிய தோரணையைப் பார்த்தால், 'நீ வேண்டுமானால் பார். பார்ப்பதைப் பற்றி எங்களுக்கு ஒரு ஆட்சேபணையும் இல்லை. ஆனால் உன் பாட்டனுக்குப் பாட்டன் வந்தால்கூட சரியான விடை கண்டு பிடிக்க முடியாது" என்ற அர்த்தம்தான் தொனித்தது.

பிறகு, அந்த வாலிபர்கள் ரமாநாத்தைத் தங்களுக்குத் தெரிந்த பக்கத்துக் கடைக்கு அழைத்துச் சென்று அந்தப் படத்தைக் காட்டினார்கள். அதைப் பார்த்ததுமே, ரமாநாத்துக்கு முன்பே அதை எங்கேயோ பார்த்திருப்பது போலப் பட்டது. ஆனால் 'எங்கே பார்த்திருக்கிறோம்' என்ற நினைவு தான் வரவில்லை. ஆகவே, அதை ஞாபகப் படுத்திக் கொள்ளுவதற்காக அவன் யோசனையில் ஆழ்ந்தான்.

"ஏன் சார், விடை கண்டு பிடித்து விட்டீர்களா?" என்று ஒரு வாலிபன் ஏகத்தாளமாகக் கேட்டான்.

"என்ன அப்பா! அதற்குள் அவசரப் படுகிறாயே! அவர் யோசனை செய்வதற்குக் கூடச் சிறிது அவகாசம் கொடுக்க மாட்டாய் போலிருக்கிறதே! சற்றுப் பொறு, அப்பா!" என்றான் இன்னொருவன்.

"எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் அவர் தாராளமாக யோசிக்கட்டும், அப்பா! முதலில் இரண்டொரு ஆட்டத்துக்கு வழி சொல்லட்டுமே, பார்ப்போம்" என்றான் மூன்றாமவன்.

அவர்கள் பேச்சைக் கேட்கத் தாளாமல் ரமாநாத் எரிச்சலுடன், "கண்டு பிடித்து விடுவேன் என்று நான் உங்களிடம் பெருமை அடித்துக்கொள்ளவில்லையே! எதற்காக இப்படிக் கிண்டல் செய்கிறீர்கள்? ஒரு தடவை இந்த மாதிரிப் படத்துக்கு நான் விடை கண்டு பிடித்திருக்கிறேன். இதற்கும் கண்டு பிடித்து விடலாமோ என்று எண்ணுகிறேன். யாரிடத்திலாவது காகிதமும் பென்சிலும் இருந்தால் சற்றுக் கொடுங்களேன். இதற்கு ஒரு காப்பி எடுத்துக் கொள்ளுகிறேன்" என்றான்.

அந்த வாலிபர்களின் அவநம்பிக்கை சிறிது சிறிதாகக் குறைய ஆரம்பித்தது. ரமாநாத்துக்கு அவர்கள் காகிதமும் பென்சிலும் கொடுத்தனர். அவன் ஒரு வினாடியில் அதற்கு ஒரு காப்பி எடுத்துக்கொண்டான். பிறகு வாலிபர்களுக்கு வந்தனம் செலுத்தி விட்டுப் புறப்பட்டான். ஆனால் இரண்டடி எடுத்து வைப்பதற்குள்ளேயே நினைவு வந்து, வாலிபர்கள் பக்கம் திரும்பி, "ஆமாம், இதன் விடையை யாருக்கு அனுப்பவேண்டும்?" என்று கேட்டான்.

"பிரஜாமித்திரன் ஆசிரியருக்கு" என்று ஒரு வாலிபன் பதில் அளித்தான்.

ரமாநாத் வீட்டை அடைந்ததும், அந்தப் படத்திலேயே தன் மூளையைச் செலவிடலானான். ஆனால் காய்களை எப்படி நகர்த்தி ஆடவேண்டும் என்பதைப் பற்றி யோசிப்பதற்குப் பதிலாக 'இந்தப் படத்தை இதற்கு முன் எங்கே பார்த்திருக்கிறோம்' என்ற விஷயத்தை நினைவுக்குக் கொண்டு வருவதில் அவன் தன் மூளையைச் செலவிட்டான். 'அது நினைவுக்கு வந்து விட்டால் விடையும் தானாகவே நினைவுக்கு வந்துவிடும்' என்பது அவனுடைய அபிப்பிராயம். சிற்சில சமயம் மூளையும் மற்றப் பிராணிகளைப் போல, காரியத்தில் கருத்தைச் செலுத்தாமல் வேறு சாக்குப் போக்குகள் தேட ஆரம்பித்து விடுகிறது. ஏதாவது சாக்குப் போக்குகள் கிடைத்து விட்டால் முக்கிய விஷயத்தை மறந்து அதிலேயே ஈடுபட்டு விடுவது மூளையின் சுபாவமல்லவா? (தொடரும்)

# காலக்ஷேபம்

### வரவேற்பு!

"ஏன் ஸார், நீங்கள் வரி வசூல் செய்கிற வேலை பார்க்கிறீர்களே! உங்களை வீட்டுக்கு வீடு விரும்புகிறவர்கள் யாரும் இருக்க மாட்டார்களே! நீங்கள் வருவதை வெறுப்பார்களே!"

"தவறாய்ச் சொன்னீர்கள், போங்கள்! நான் போகிற இடங்களில் எல்லாம் 'இன்னொரு தடவை வாருங்கள்' என்று எவ்வளவு வருந்தி வருந்திச் சொல்லுகிறார்கள்!

✶

### அப்படியா!

டாக்டர்:—அன்று வந்தாரே, அந்தச் செட்டியார் என்னிடம் இரண்டு வேளை மருந்து வாங்கிச் சாப்பிட்டார். அப்புறம் அவர் வரவேயில்லை.

நண்பர்:— அப்படியா? கஷ்டப்படாமல் போய்விட்டாராக்கும்!

✶

### நல்ல காரணம்

"என்ன, நீங்கள் இப்பொழுதெல்லாம் 'கிளப்பு'ப் பக்கமே வருகிறதில்லையே?"

"ஆமாம், என் குடையை அங்கே வைத்து விட்டு வந்துவிட்டேன்!"

"அப்படி யென்றால் அங்கே போகாமல் இருப்பானேன்?"

"நான் அங்கே யிருந்து எடுத்து வந்த குடை இன்னும் நல்லதா யிருந்து விட்டது!"

✶

### அப்பொழுது இல்லை!

ஒருவர் (ஹோட்டல் மானேஜரைப் பார்த்துக் கோபத்துடன்):—என்ன ஐயா இது! காப்பி கொண்டு வருவதற்கு ஒரு சர்வர் இரண்டு மணி நேரம் எடுத்துக் கொண்டால் என்ன செய்வது?

மானேஜர்:—யார் அந்த சர்வர்? அவன் தலை நரைத்திருந்ததோ!

ஒருவர் (அலுப்புடன்):—நான் முதலில் அவனைப் பார்த்தபோது அவன் தலை நரைத்திருக்கவில்லை!

✶

### சரிதான்!

கிட்டு அன்றைக்குத்தான் பள்ளிக்கூடத்துக்குப் போய் விட்டு வந்தான்.

தாயார்:—கண்ணு, இன்றைக்குப் பள்ளிக்கூடத்திலே உபாத்தியாயர் என்னடா சொல்லிக் கொடுத்தார்?

பையன்:—இன்னிக்கு ஒண்ணும் சொல்லித் தரவில்லை, அம்மா! அதாலே நாளைக்கும் போகணும்போலே யிருக்கு!

✶

### ரொம்ப சரி!

புருஷன்:—என் தங்கை மீனாக்ஷியின் ஆம்படையான் இவ்வளவு பித்துக்குளி என்பது அவள் கல்யாணத்துக்கு அப்புறம்தான் எனக்குத் தெரிந்தது.

மனைவி:—ஏன், எனக்கு அப்போதே தெரியும். அவன் உங்கள் தங்கையைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வந்தானே, அதிலிருந்தே நான் ஊகித்துக்கொண்டு விட்டேன்!








★

### பாரதி கைங்கரியம்

கும்பகோணத்து எழுத்தாளர் நண்பர்கள் பாரதி மண்டப கைங்கரியத்திற்காக ரூ. 1351 சேர்த்து அக்டோபர் 8உ மாலை கல்கி ஆசிரியரிடம் கொடுத்தார்கள். டவுன் ஹாலில் பாரதி பக்தர்களும் தமிழன்பர்களும் நிறைந்திருந்தார்கள்.

★

இரவு பதினேரு மணிக்கு ஜயம்பேட்டை நண்பர்கள் கல்கி ஆசிரியரை வழி மறித்து நிறுத்திப் பண முடிப்பு அளித்தார்கள். வைபவம் நடந்த இடத்தில் இம்மாதிரி அற்புத அலங்காரக் காட்சி ஜொலித்துக் கொண்டிருந்தது.

★

# தர்மமே ஜயம்

## காபன்

இரவு மணி பத்துக்கு மேலாகி விட்டது. கடைத்தெருப் பக்கம் ஒருவிதமான இரைச்சலோ பரபரப்போ இல்லை; ஜன நடமாட்டமும் இல்லை; வீதிகளில் இருள் கவிந்து இருந்தது.

'தர்மமே ஜயம்' என்ற விலாசமிட்ட மளிகைக் கடை மட்டும் திறந்திருந்தது. அதன் முதலாளி தர்மப்பெருமாள் செட்டியார் அன்றைய வரவு செலவுக் கணக்குகளை முடித்து ரூபாய்களை எண்ணும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. எல்லாக் கடைகளையும் அடைத்த பின் தம்முடைய கடையை மாத்திரம் ஒரு மணி நேரமாவது திறந்து வைத்திருப்பதுதான் செட்டியாருடைய வழக்கம்.

செட்டியார் கடையை மூடப் போகும் சமயத்தில் யாரோ ஒருவர் அங்கு வந்தார். அவருக்கு வயது முப்பது இருக்கும். சேட் மாதிரி உடை தரித்திருந்தார். அவர் செட்டியாரைப் பார்த்து, "நமஸ்காரம், செட்டியார்வாள்! உங்களைப் பார்க்க வேண்டுமென்று இரண்டு மூன்று தடவை முயற்சி செய்தேன், முடியவில்லை. நல்லவேளை, இப்போதாவது உங்களைப் பார்க்க முடிந்ததே!" என்று சொல்லிக்கொண்டே அங்கிருந்த ஒரு பெஞ்சியில் உட்கார்ந்தார்.

செட்டியார் தம்முடைய முகத்தில் ஒரு புன்னகையை வரவழைத்துக் கொண்டு, "வாருங்கள், வாருங்கள்! வெற்றிலை போடுங்கள்......" என்று தம் அருகில் இருந்த வெற்றிலைத் தட்டை அவர் பக்கம் நீட்டிக்கொண்டு, "ஊரிலே எல்லோரும் சௌக்கியம்தானே! பார்த்து ரொம்ப நாளாச்சு. இந்த ரயிலிலேதானே வருகிறீர்கள்?" என்று கேட்டார்.

வந்தவர் ஆச்சரியத்துடன் செட்டியாருடைய முகத்தைப் பார்த்து, "என்னை இதற்குமுன் நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

இந்தக் கேள்வியைக் கேட்டதும் செட்டியாருக்குச் சிரிப்பு தாங்க முடியாமல் வந்துவிட்டது. "நன்றாய்க் கேட்டீர்கள்!...... ஹி ஹி ஹி ......ரொம்ப நன்றாய்க் கேட்டீர்கள்!......எனக்கா நினைவில்லை?...நான் என்ன, இன்றைக்கா நேற்றா வியாபாரம் செய்கிறேன்? மூன்று தலைமுறையாகத் தராசைக் கையிலே பிடித்த வம்சம்...... தெரிகிறதா?" என்று தொந்தி குலுங்கச் சிரித்தார் செட்டியார்.

சாதுரியமாய்ப் பேசி கேட்ட விஷயத்தை மழுப்பி விடுவது செட்டியாருடைய வியாபாரத் தந்திரங்களில் ஒன்று.

புதிதாக வந்த அந்த சேட்ஜி செட்டியாரைப் பார்த்து, "நீங்கள் என்னைப் பார்த்திருக்கலாம். உங்கள் ஊர் மிட்டாய்க் கடை கஜேந்திர லாலா இருக்கிறார் அல்லவா, அவருக்கு நான் ஷட்டகர். அடுத்தக்குடியிலே இருக்கிறேன் நான்......" என்று இன்னும் மேலே ஏதோ சொல்லப் போனார்.

அதற்குள் செட்டியார் அவருடைய கையை எட்டிப் பிடித்துக் கொண்டு வயிறு குலுங்கச் சிரித்தார். அந்த அதிர்வேட்டுச் சிரிப்பிலே அந்த மளிகையிலுள்ள ஒழு சுடர் விளக்குகளும், தராசுகளும், எண்ணெய் டின்களும், வரிசை வரிசையாய் அடுக்கியிருந்த மாவு மூட்டைகளும் அதிர்ச்சியடைந்து 'குலுங்குவது போலிருந்தது. சிட்டையிலிருந்து பேரேட்டிலே கணக்கு எழுதிக் கொண்டிருந்தபடியே தூங்கிவிட்ட கணக்குப் பிள்ளை தனகோடிகூட திடுக்கிட்டு விழித்துக் கொண்டான்.

"உங்களை எனக்கு ரொம்ப நன்றாகத் தெரியும். அதைப்பற்றி ஒன்றும் சொல்ல வேண்டாம். இப்போது நீங்கள் எதற்காக வந்திருக்கிறீர்கள் என்பதுகூட எனக்குத் தெரியும். அதைச் சொல்லட்டுமா? கோபித்துக் கொள்ளக்கூடாது!" என்றார் செட்டியார்.

ஒரு கணம் சேட் திகிலடைந்தவர் போல் காணப்பட்டார். பிறகு அவர் சமாளித்துக் கொண்டு, "சொல்லுங்கள், பார்ப்போம்!" என்றார்.

"நீங்கள் இந்த ராத்திரி வேளையிலே வேறு எதற்கு இவ்வளவு தூரம் வரப் போகிறீர்கள்? சர்க்கரைக்காகத்தான் வருவீர்கள்!" என்றார் செட்டியார்.



"ஜோஸ்யம்கூடத் தெரியுமோ உங்களுக்கு?......அப்புறம்?" என்றார் சேட்.

"இந்த 'தர்மமே ஜயம்' விலாசம் இருக்கிறதே, இது எப்பேர்ப்பட்டது என்பது ஊர் உலகமெல்லாம் தெரியும். 'கோட்டா'ப்படி ஒழுங்காக 'டாண்'ணு எல்லாருக்கும் அரை அரை வீசை கொடுப்பதுதான் எங்கள் வழக்கம். ஒரொருத்தரைப்போல கறுப்பு மார்க்கெட்டிலோ வெள்ளை மார்க்கெட்டிலோ ஒதுக்குவதற்கு இந்த மளிகையிலே இடமில்லை. 'விருதாப் பயல்கள்' 'தராசு பிடிக்கத் தராம் கெட்ட கழுதைகள்' அல்லவா அப்படி ஆசைப்பட்டு ஒதுக்கி வைப்பார்கள்? என்னடா தனகோடி, ஏதாவது இருக்கா ஐயாவுக்கு?...ரொம்ப வேண்டியவாள்டா, பெரிய மனுஷாள்!" என்று செட்டியார் ஆரம்பித்தார்.

"யாருன்னு என்ன? மருந்துக்குக் கூடக் கிடையாது. அடுத்த கோட்டா வந்துதான் ஆகவேண்டும். அதுவும் கூப்பன்காரன்களுக்குத்தான்!" என்ற பதில் தனகோடியிடமிருந்து வந்தது.

உடனே செட்டியார் சேட்டைப் பார்த்து, "பார்த்தீர்களா! 'தர்மமே ஜயம்' என்ற இந்த மளிகையில் ஈ எறும்புகூட சத்தியம்தான் பேசும்......டேய்! பலகையைப் போடு; நேரமாய் விட்டது!" என்றார்.

இதைக் கேட்டதும் சேட்ஜி கொஞ்சம் சிரித்துக் கொண்டே, "உங்கள் ஜோஸ்யம் கொஞ்சம் குறி தவறி விட்டது. நான் சர்க்கரைக்காக வரவில்லை. உங்கள் புண்ணியத்திலே எனக்கு 'அலாட்' செய்திருக்கும் 'கோட்டா'வே அதிகம். வேறொரு விஷயமாய் வந்தேன். என்னிடம் கைவசமிருக்கும் ஒரு சரக்கு தங்களுக்குத் தேவையாயிருக்குமா என்ற விஷயமாய்த்தான் வந்தேன். வெளியே தெரிந்தால் அடி பிடி வந்துவிடும். உங்களுக்குச் சிமெண்டு தேவையா?"

கடைசி இரண்டு வாக்கியங்களை மிகவும் மெல்லிய குரலில் செட்டியார் காதுகளில் மட்டும் விழும்படி சேட் சொன்னார்.

"கொஞ்ச நாளாக நான் மிட்டாய் தொழிலை விட்டுவிட்டேன். 'சைட் பிஸினெஸ்' ஒன்று ஆரம்பித்திருக்கிறேன். என் நண்பர்கள் 'காண்ட்ராக்ட்' எடுத்திருக்கிறார்கள். அவர்கள் அனுசரணையின் பேரில் சிமெண்ட் மூட்டைகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. கண்ட்ரோலிலே மூட்டை மூன்று ரூபாய். கறுப்பு மார்க்கட்டிலே மூட்டை முப்பது நாற்பது ரூபாய்க்குக்கூட கிடைக்கிறதில்லை. தங்களுக்குத் தேவையானால் சொல்லுங்கள். இன்றைக்கு ஆர்டர் கொடுத்தால் பத்தாயிரம் மூட்டை வரை கொடுக்கலாம். இரண்டு நாள் போனால் 'ஸ்டாக்' தீர்ந்து விடும்!"




"ஜோஸ்யம்கூடத் தெரியுமோ உங்களுக்கு!"

"சிமெண்டா! பத்தாயிரம் மூட்டையா!" என்று சொல்லிக்கொண்டே செட்டியார் ஒரு கண நேரம் ஸ்தம்பித்து நின்றார்.

"இந்தக் காலத்திலே வெகு ஜாக்கிரதையாய் நடந்து கொள்ள வேண்டும். 'சட்டி சுட்டது, கை விட்டது' என்று இருக்க வேண்டும். அதிகாரிகள் தொந்தரவு சகிக்கக் கூடியது அல்ல—ஐயோ, தெய்வமே! போதும், போதும்! எனக்கு 'அலாட்' பண்ணியிருந்தானே சர்க்கரை, அதை நான் மிட்டாய்த் தொழிலை நிறுத்தியதும் 'ஏனடா வாங்கவில்லை?' என்றான். நான் அதற்கு ஒரு யுக்தி செய்தேன். அந்தச் சர்க்கரை மூட்டைகளை வாங்கிக் கள்ள மார்க்கெட்டிலே விற்றுவிட்டேன். ஒரு மூட்டை கண்ட்ரோலிலே முப்பத்தாறு ரூபாய். வெளியிலே நூற்றைம்பது இருநூறு என்று விற்கிறது!"

"ஆ, நூற்றைம்பதா! இங்கே அதிகப்படியாகப் பத்து ரூபாய்தானே அழுகிறான்கள்!......அது போகட்டும், நம்மிடம் கொஞ்சம் சர்க்கரை ஸ்டாக் இருக்கிறது. நம்முடைய சரக்கல்ல, வேறு ஆளுடையது. அதைத் தள்ளிவிட வேண்டும்" என்றார் செட்டியார்.

"மற்றவர்கள் விஷயத்தைப் பற்றிப் பேசாதீர்கள். உங்கள் சொந்தச் சரக்கென்றால் பேசுங்கள். வேண்டிய லாபம் வைத்து எடுத்துக் கொள்கிறேன். நீங்கள் நம்முடைய ஆள். பிறத்தியாரைப் பற்றி ஏன் கவலை?"

செட்டியார் திகைப்பும் ஏமாற்றமும் கலந்த முகத்துடன், "அடுத்த ஆள் என்றால் அன்னியர் அல்ல; நம்முடைய சரக்கு மாதிரித்தான். நம்முடையதேதான் என்று வைத்துக் கொள்ளுங்களேன்!" என்றார்.

"முதலாளி, நீங்கள் பழைய காலத்து மனிதராக அல்லவா இருக்கிறீர்கள்? அடுத்தவாளுக்கு ஏன் இத்தனை கஷ்டப்படுகிறீர்கள்? உங்கள் சரக்கானால் மூட்டை நூற்றிருபத்தைந்து என்று இன்றைக்கே எடுத்துக் கொள்கிறேன். எத்தனை மூட்டைகள் இருக்கும்? ரூபாய்க்குப் பதிலாக சிமெண்டாகவே வாங்கிக் கொள்ளுங்கள். எத்தனை ஆயிரம் வேண்டும்? இரவிலேயே லாரிகளில் அனுப்பி விடுகிறேன்."

"என்னிடம் ஐந்நூறு மூட்டைகள் சர்க்கரை இருக்கிறது. ஆனால், விலையைத் தாறுமாறாகக் குறைக்கிறீர்களே! இருநூறு ரூபாயாகப் போட்டுக் கொண்டாலும் பாதகமில்லை!" என்றார் செட்டியார்.

"சரி, ரூபாயைப் பற்றிக் கவலை இல்லை. நீங்கள் வெகு ஜாக்கிரதையுடன் நடந்து கொள்ள வேண்டும். 'கோடௌன்' வெகு இரகசியமான இடத்தில் இருக்கவேண்டும். போலீஸ்காரன் கண்ணிலே அகப்பட்டுக் கொள்ளக் கூடாது. நாளை இரவு பன்னிரண்டு மணிக்கு இதே இடத்துக்கு நமது லாரிகள் வந்து நிற்கும். ஒவ்வொரு லாரியின் கீழேயும் சிமெண்ட் மூட்டைகளை அடுக்கி, மேலே மட்டும் கரி மூட்டைகள் போட்டிருப்பேன். வழியில் யாராவது சோதித்தால் 'கரி மூட்டை' என்று சொல்லிவிடலா மல்லவா? லாரியில் நான் வருவேன். நீங்கள் ஒன்றும் பேசாமல் ஏறிக்கொள்ள வேண்டும். ஹாரன் சத்தம் கூடக் கேட்கக் கூடாது. நேராக உங்கள் 'கோடௌ'னுக்குப் போய் சிமெண்ட் மூட்டைகளை இறக்கிவிட்டு மளமள வென்று சர்க்கரை மூட்டைகளை ஏற்ற வேண்டும். உடனே பளிச் சென்று லாரி புறப்பட்டு விட வேண்டும்...... நேரமாகிறது. வருகிறேன், ஜாக்கிரதை!" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார் சேட்.

செட்டியாருக்கு உண்டான ஆனந்தம் கொஞ்சநஞ்சம் அல்ல.

மறுநாள் இரவு செட்டியார் வழக்கத்துக்கு விரோதமாக ஏழு மணிக்கே கடையைச் சாத்தி விட்டார். இரவு மணி பத்தடித்தது......பதினொன்றாயிற்று; பதினொன்றரையும் கழிந்து விட்டது. தீபாலங்காரங்களும் ஜன சமுத்திரமாய் லக்ஷ்மீகரம் ததும்பிக் கொண்டிருந்த கடை வீதி, இருள் நிறைந்து ஆள் நடமாட்டமற்று ஸ்மசானத்தின் நிச்சப்தத்துடன் பார்க்கப் பயங்கரமா யிருந்தது. இந்தச் சமயத்தில் வெகு தூரத்தில் 'விர்ர்' என்ற சத்தம் கேட்டது. ஆம், லாரி வரும் சத்தந்தான்! தெரு முனையில் அது பூதம்போல் திரும்பி வந்தது. ஆம், அது சேட்டின் லாரியாய்த் தானிருக்க வேண்டும். தர்மப் பெருமான் செட்டியார் தம்மை யாரும் அடையாளம் தெரிந்து கொள்ள முடியாதபடி பலத்த முண்டாசு கட்டிக் கொண்டு கடையின் முகப்புப் பெஞ்சில் உட்கார்ந்திருந்தவர், பரபரப்புடன் எழுந்து வெளியே வந்தார்.

லாரி அந்த இடத்துக்கு வந்ததும் 'டக்' கென்று நின்றது.

"என்ன செட்டியார்வாள்! தயார் தானே?" என்று கேட்டுக் கொண்டே சேட் லாரியிலிருந்து கீழே இறங்கி வந்தார்.



"உஸ்...... தயவு செய்து மெதுவாகப் பேசுங்கள்!" என்றார் செட்டியார், அவருடைய கைகளைப் பிடித்துக் கொண்டு.

"சரக்கைப் பார்த்தீர்களா? மூட்டைகளை இங்கேயே இறக்கச் சொல்லட்டுமா? ஏன் இப்படி மிரளுகிறீர்கள்?" என்றார் சேட்.

இருவரும் லாரியின் முன்பு, விளக்குகளின் பிரகாசத்தில் நின்று கொண்டிருந்தனர்.

"சேட்ஜீ, இங்கே இறக்க வேண்டாம். வாருங்கள், 'கோடௌனு'க்குப் போய் விடலாம். சாவி தயாரா யிருக்கிறது. லாரியில் ஏறிக்கொள்வோமா?" என்றார் செட்டியார்.

இருவரும் லாரியில் ஏறிக் கொண்டார்கள். "நேராகப் போகட்டும். சத்திரம் வரும். அங்கே இடது பக்கம் திருப்ப வேண்டும். பிறகு பஜனை மடம் வரும். அதன் முன்னால் லாரியை நிறுத்த வேண்டும்" என்றார் செட்டியார்.

செட்டியாருடைய அச்சத்தைக் கண்ட சேட், "என்னுங்க செட்டியார்வாள், உங்களுக்கு இத்தனை கோழைத்தனம் ஆகாது. பெரிய வியாபாரம் செய்கிறீர்களே, இப்படிப் பயப்படலாமா? துணிந்து அடித்தால் துக்கமில்லை. இல்லையா? ஹி...ஹி...... என்ன சொல்கிறீர்கள்?" என்றார்.

"அப்படி அல்ல; ஒரு பழமொழியைக் கேள்விப்பட்டிருப்பீர்கள் அல்லவா? அயலூரானுக்குத் தண்ணீருக்குப் பயம்; உள்ளூரானுக்குப் பேய்க்குப் பயம்!"

"ஓகோ, சரிதான்! போலீஸ் என்றால் பேயாக நினைத்துப் பயப்படுகிறீர்கள் போலிருக்கிறது. அதற்கென்ன, செட்டியார்வாள்! ரூபாயை அள்ளி விதைக்க வேண்டும். கட்டுக் கட்டாக நோட்டுக்களை வெளியேற்ற வேண்டும். ஆயிரம் செலவழித்தால் லக்ஷக் கணக்கில் பெட்டிக்குள்ளே வந்து குவியுமே!"

அதற்குள், 'தட தட'வென்ற சத்தத்துடனும் 'கிரீச் கிரீச்' சென்ற இரைச்சல்களுடனும் ஓடிக்கொண்டிருந்த லாரி, பஜனை மடத்துக்கு எதிராக வந்து நின்றது.

செட்டியார் முதலில் இறங்கினார். சேட் அவருக்குப் பின்னால் இறங்கினார். டிரைவரும் "லாரி உள்ளே போகுமா?" என்று கேட்டுக்கொண்டே பின்னால் இறங்கினார்.

பஜனை மடம் பாழடைந்ததாய்க் காணப்பட்டது. அங்கு பஜனையோ பூஜையோ நடந்து யுகாந்திரக் கணக்கில் ஆகியிருக்கும் போல இருந்தது.

பளுவான பூட்டைத் திறந்து, டார்ச் லைட்டை இடையிடையே அடித்துக் கொண்டு உள்ளே பிரவேசித்தார் செட்டியார். பிராகாரத்துப் பக்கம் போய், படிக்கட்டுகளில் இறங்கி, தோட்டத்துப் பக்கம் சென்றார். அங்கே பூட்டியிருந்த ஓர் அறையைத் திறந்தார். ஆள் அரவமற்ற அந்த அறைக்குள் எலிகளும் பெருச்சாளிகளும் குதித்து ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தன. மனதைக் குமட்டக் கூடிய பலவிதமான வாசனைகள் வந்து கொண்டிருந்தன. தேங்காய் எண்ணெயின் வாசனை; மண்ணெண்ணெயின் வாசனை; பருப்பு மூட்டைகள் மக்கிப் போனதால் வரும் வாசனை; கசிகின்ற கருப்பட்டியின் வாசனை ...... அப்பப்பா!

சேட் அதை யெல்லாம் பார்த்தார். அவருக்கு ஒரே ஆச்சரியமாகி விட்டது. அவர் செட்டியாரைப் பார்த்து, "நீங்களும் பரவாயில்லை, செட்டியார்வாள்! நான் நினைத்ததற்கு மேலாகவே ஸ்டாக் வைத்திருக்கிறீர்களே!" என்றார்.

இதற்குள், ஆள் நடமாடுவது போலும் ஏதேதோ பேசிக் கொள்வது போலும் வீதியிலிருந்து அரவம் வந்தது. அதைக் கேட்டதும் செட்டியாரும் சேட்டும் சற்றுத் திடுக்கிட்டனர்.

"இருங்கள் செட்டியாரே, இதோ வந்து விடுகிறேன். எதிலும் முன் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டு, சேட் தோட்டத்துப் பக்கமாகப் போனார்.

அவ்வளவுதான்; விசில் சத்தம் காதைப் பிளந்தது. அதைத் தொடர்ந்து திமு திமு வென்று பலர் ஓடி வரும் சத்தமும் கேட்டது. டார்ச் குறுக்கும் நெடுக்குமாய்ப் பிரகாசத்தை வீசிற்று.

என்ன ஆச்சரியம்! அடுத்த நிமிஷமே எங்கும் சிவப்பு மயமான போலீஸ் தொப்பிகள்!

செட்டியார் திகைத்துப் போய்க் கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்த்தார். எதிரே நின்ற சேட்டைக் காணவில்லை. அவருக்குப் பதிலாகப் போலீஸ் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் ஆனந்தம் 'ஹஹ்ஹஹ்ஹா' என்று சிரித்துக்கொண்டு அங்கே நின்றார்!




## மிருதுவும் பூரணமுமான சிகிச்சை!

ப்ருக்லாக்ஸ் மலச்சிக்கல் ஏற்படும் குடலினூடேயே சென்று தாக்குவதினால் உங்கள் உடம்பிலிருந்து சகல அசுத்தத்தையும் அறவே அகற்றி விடுகின்றது. ப்ருக்லாக்ஸ் பார்வைக்கும் ருசிக்கும் தித்திப்பான சாக்லெட்டைப்போலிருக்கும். அது வயதானவர்களுக்கும் குழந்தைகளுக்கும் அவசியம் தேவையான ஓர் சஞ்சீவி.

## ப்ருக்லாக்ஸ்

சாக்லெட்
லாக்ஸெடிவ்

டின் ஒன்றுக்கு அணா பத்து. எங்கும் கிடைக்கும்

சென்னை மாகாணத்துக்கு விற்பனை ஏஜண்டுகள்:

ஓரியண்டல் மர்க்கன்டைல் ஏஜன்ஸி, 99-A, அரமனைக்காரத் தெரு, மதராஸ்

No. 1.








வருஷக்கணக்கில் டிவிடெண்டு

(இலாபம்) கொடுக்கக் கூடியது.

## தங்க முனை சேமிப்பு

... ஏனென்றால் மென்ட்மோர் ஆடோப்ளோ பேனா இந்தியாவின் சீதோஷ்ண நிலையைத் தாங்கக்கூடிய பொருள்களால் ஸ்பெஷலாக செய்யப்பட்டது. ட்ராப் - பில்லிங், லிவர், ஸ்டட் - பில்லிங் முதலிய மாடல்களில் கிடைக்கிறது. அதனுடைய கெட்டியான நிப் 14 காரட் தங்கத்தால் செய்யப்பட்டது. ஆஸ்மி இருடியத்தில் தோய்க்கப்பட்ட முனையோடுகூடியது. ஒவ்வொரு பேனா குழலின்மேலும் நிப்பின்மேலும் மென்ட்மோர் என்ற பெயர் செதுக்கப்பட்டிருக்கிறதாவென்று கவனித்துப்பாருங்கள். உங்கள் ஆயுள்கால சேவையின் அஷ்யூரன்ஸ்.




மென்ட்மோர்
ஆடோப்ளோ.

இங்கிலாந்தில்
செய்யப்பட்டது.

MENTMORE
Auto-Flow
FOUNTAIN PEN

வர்த்தக விசாரணைகளுக்கு உரிமைபெற்ற முழு விநியோகஸ்தர்கள்:-
முல்லர் அன்டு பிப்ஸ் (இந்தியா) லிட். தபால்பெட்டி நெ. 773, பம்பாய்.


பொன் விழாவின்
உதயம்
பண்டிட் டி கோபாலாசாரலுவின்
ஜீவாம்ருதம்
வியாதியினல் அவதிப்படும் மனித சமுகத்துக்கு சேவை புரிவதில் ஐம்பதாவது வருஷம் ஆரம்பமாகின்றது. என்றும் போல் இன்றும் ஜீவாம்ருதம் வியாதிக்குப் பின் குணம் பெறுவோர், பலஹீனர் அனைவருக்கும் உகந்த அருமையான டானிக்காக விளங்குகிறது.
ஆயுர்வேதாஸ்ரமம் லிட்.
மதராஸ்-7


நீங்கள்
கவனிக்கவேண்டியது !
குணம் நிறைந்த
கோகுல் கூந்தல்
தைலம்
கூந்தலுக்கு சிறந்த மணமும் மிருந்த வனப்பும் நிறைந்த வளர்ச்சியும் தருகிறது ஆயிரக்கணக்கான மக்கள் அதையே உபயோகிப்பதன் உண்மையும் அதுவே
REGISTERED TRADE MARK
கோகுல் டிரேட் மார்க் கவனித்து வாங்குங்கள்
டி. எஸ். ஆர். & கோ
கும்பகோணம்
மதராஸ் ஏஜண்டு :
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
பைகிராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி :: மதராஸ்
கோவை, நீலகிரி ஜில்லாக்கள்
& பாலக்காடுக்கு ஏஜண்டு :
B. பாலபட்டாபி,
வைசியாள் தெரு, கோயமுத்தூர்


சற்று கவனியுங்கள் "பார்கோ"
உங்களிடம்
சுருட்டுகள்
எப்பொழுதும் நீங்கள் சுருட்டு வாங்கும் பொழுது சற்று கவனித்து "பார்கோ" சுருட்டை வாங்குங்கள். எப்பொழுதும் நீங்கள் சுருட்டு உபயோகிக்கும் பொழுது, சற்று கவனித்து "பார்கோ" சுருட்டை உபயோகியுங்கள்.
முதன் முதலாக எங்கும் ஒரே விலை, குணத்துடன் விற்கப்படுபவை "பார்கோ" சுருட்டுகள்தான்.
நீங்கள் வாங்கும் அல்லது உபயோகிக்கும் சுருட்டில் இந்த மார்க் இருக்கிறதா என்று பாருங்கள்
PARCO
இந்தியன் டுபாக்கோ கம்பெனி லிட்.
(மானேஜிங் ஏஜண்ட்ஸ் பாரத தாக் கம்பெனி)
தபால் பெட்டி 159 மதராஸ்
FAS.ITC-1.


எல்லா கெமிஸ்டுகளிடமும் கிடைக்கும்.
ZEPHROL
'ZEPHROL'
ஜெப்ரால்
எம். அண்டு பி. இருமல் ஸிரப்
குழந்தைகளுக்கும் பெரியோர்களுக்கும் தேவையானது.
M&B
மே அண்டு பேக்கர்
MAY & BAKER

# நோயுற்ற குழந்தைகளுக்குப் பல வருடங்களாக சேவை புரிந்து வருகிறது





ஜம்மியின் லிவர்க்யூர் பல்லாண்டுகளாக செய்து வரும் சேவையால் ஆயிரக்கணக்கான விலையற்ற சிற்றுயிர்கள் ஈரல் குலைக்கட்டி வியாதிகளிலிருந்து காப்பாற்றி மனித சமூகத்திற்கு விசேஷ நன்மை புரிந்துவருகிறது.

டாக்டர்கள் இவ்வியாதியைபோக்க ஆரம்ப நிலை, கட்டி முதிர்ந்த நிலைக்குத்தகுந்தவாறு 'சிம்பிள்' அல்லது 'காம்ப்பிளிகேட்டட்' லிவர்க்யூர் மருந்துகளை சிபார்சு செய்து இவ்வியாதியை குணப்படுத்துகிறார்கள்.

ஜம்மியின் சிம்பிள் லிவர்க்யூர் சிறிய அளவில் கொடுத்துவர, வியாதி வராமல் தடுக்கவும், பசி, ஜீரண சக்திவிருத்தி செய்யவும் மலச்சிக்கல்களைப் போக்கி ஈரல், குலைகளை சரியானபடி வேலைசெய்கிறது.

முன்னால் ஈரல் குலைக்கட்டி நோயினால் பிடிக்கப்பட்ட குழந்தைகளின் தாய்மார்கள் திரும்பவும் கர்ப்பம் தரிக்கும் பொழுது ஜம்மியின் டானிக்கை உபயோகப் படுத்துவது நல்லது. பிறக்கப் போகும் குழந்தையின் ஈரல், குலைகள் தாய் மூலமாய் ஏற்படுகிறது என்ற ஆயுர்வேத சித்தாந்தத்தை அனுசரித்து இந்த டானிக் தயாரிக்கப்பட்டுள்ளது.

## ஜம்மியின் லிவர்க்யூர்



எங்கும் கிடைக்கும்.

ஜம்மி வெங்கடரமணய்யா அன் ஸன்ஸ்
மயிலாப்பூர், மதராஸ், (போன் நெ. 8139)
தேப்பகுளம், திருச்சிராப்பள்ளி, பெரிய தெரு கும்பகோணம், பெங்களூர்,
பம்பாய் 4, (போன் நெ. 41593) மற்றும்: கல்கத்தா, லக்னோ, etc.

ADARTS J. 234 TAMIL

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk Madras.

குழந்தைக்கு முக்கியமானது **பேபி கிரைப்** குழந்தைக்கு ஆரோக்கியமளிப்பது

குழந்தைகளுக்கு உண்டாகும் வாயு வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, அஜீரணம், மாந்தம், பல் முளைக்கும்போது ஏற்படும் வயிற்றுப் போக்கு முதலிய சகல வியாதிகளையும் போக்கி நல்ல ஆரோக்கியத்தையும் தரும் சிறந்த திராவகம்.

## அயோடிசால்

மிகச் சிறந்த ரத்த சுத்தி மருந்து

இது திரேகத்தில் உஷ்ணம் அதிகரித்து அதனால் ஏற்படும் ரோகங்களை குணப்படுத்தி, திரேகத்திற்கு ஆரோக்கியத்தை கொடுக்கும். ரத்தத்தை சுத்தி செய்து ரத்த விருத்தியையும் உண்டாக்கும்.

## சைபால்

முகப்பரு, சேத்துப் புண் சிரங்கு, வேனல் கட்டி, தீப்பட்ட புண், கரப்பான் முதலியவைகளுக்குக் கைகண்ட மருந்து.

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள் :

## தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை

ஏஜண்டுகள் :—ராஜன் டிரக் ஸ்டோர்ஸ், நைனியப்ப நாயக்கன் தெரு, மதராஸ்-3; சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்—பெஜவாடா, பேர்ஹாம்பூர் & சிகந்தராபாத்; கிரிஜா மெடிகல் ஸ்டோர்ஸ், பெங்களூர் ஸிடி

சிலோன் ஏஜண்டுகள் :—M. O. A. கனி & கோ., 96, சதாம்ஸ் ரோடு, கோட்டை, கொழும்பு

## சுதந்திர தீபாவளி மலிந்த விலையில்

2000 டிசைன்களில் பட்டாடைகள் 4000 டிசைன்களில் நூல் ஆடைகள்

தீபாவளிக்காக புதிய டிசைன்களில் உயர்தர கொள்ளேகாலம் பட்டினாலும், 100, 80, 60, நெ. நூல்களிலும் உத்திரவாதமான கெட்டிச் சாயம் போட்டு ஸ்பெஷலாக தயாராகி வந்து கொண்டிருக்கின்றன.

பெங்களூர், பெனாரஸ், பெங்கால், கொள்ளேகாலம், ஆரணி, காஞ்சீபுரம், பட்டு சேலைகள் அற்புதமான பார்டர்கள், வசீகரமான முந்திகளுடன் 5, 6, 7, 8, 9, 10 கெஜங்களில் திறமையான நெசவாளர்களால் நிபுணர்களின் மேற்பார்வையில், உயர்தரமாக நெய்யப்பட்டு வந்து குவிந்துள்ளன.

நூல் சேலைகள் உறையூர், கோயம்புத்தூர், மதுரை, சேலம், அம்மாசத்திரம், வங்காரம்பேட்டை, ஜம்மலமடுகு முதலிய ஊர்களிலிருந்து புதுப்புது டிசைன்களில் அழகான பார்டர்கள், நேர்த்தியான முந்திகளுடன் கண்கவர் கலர்களில் 5, 6, 7, 8, 9 கெஜங்களில் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன.

சேலம், துயிலி, மதுரை, மெல்லிய நூல் வேஷ்டிகள், ஜரிகை துப்பட்டாக்கள், அங்கவஸ்திரங்கள், வெண்பட்டு வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள் ஆயிரக்கணக்கான டிசைன்களில் வந்து குவிந்துள்ளன.

பட்டுச் சேலைகள் ரூ. 17-0-0 முதல் 700 வரை
நூல் சேலைகள் ரூ. 7-12-0 முதல் 70 வரை

ஏழைகள் பணக்காரர்கள் எல்லோருக்கும் பொருத்தமான விலைகள்

சகாயமான விலைகள் நேர்த்தியான ரகங்கள்

இன்றே வந்து பார்வையிடுங்கள்

## கஸ்தூரிபாய் கம்பெனி

உயர்தர பட்டு, நூல் ஜவுளி வியாபாரிகள்

மேல வீதி :: சிதம்பரம்

REGD. NO. M. 4392

License No. 18
Licensed to post without prepayment

சருமம் உலர்ந்தால் கோட்டி-கவனிப்பு அவசியம்

11537/124/80



முதலில்
பவுண்-
டேஷன்

அதிவசீகரமான அழகுச்சோடனைக்கு முதல்
தேவை இது-கோட்டி பவுண்டேஷன்
கிரீம். இதைக் கொஞ்சம்
சருமத்தின்மீது தேய்த்துத்தடவினால்
சருமம் வெல்வெட் போன்று மிருதுவடை
யும். இந்த அடிப்படையில் பவுடரோ,
ரூஜோ போட்டுக்கொண்டால் அவைமிக
வசீகரமாக அமையும். எப்பொழுதுமே
உங்கள் அழகுச்சோடனைக்கு முதலில்
உபயோகிக்கவேண்டியது . . .

பவுண்டேஷன்
கிரீம்
தயாரிப்பு கோட்டி

Coty

ஏஜண்டுகள் :
டி. ஏ. டேய்லர் & கம்பெனி (மதராஸ்) லிட்.
100, அரமனைக்காரத் தெரு, ஜி. டி., மதராஸ்

F.C.I